Registered as a news paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி என் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 15 ஆம் நாள் துல்கஃதா 2 (28-3-68) வியாழக்கிழமை இதழ் 48

# இந்தியாவின் செயல் பற்றி பாக். கண்டனம்

## காஷ்மீர்பேச்சை கெடுக்கும் செயல் என கருத்து

கராச்சி, மார்ச் 27

பாகிஸ்தானும் சீனவும் செய்துகொண்ட எல்லை ஒப்பந்தம் பற்றி ஐ. நா பாதுகாப்புச் சபைக்கு இந்தியா கடிதம் எழுதியிருப்பது, காஷ்மீர் பிரச்னைக்கும் மற்றும் அது சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கும் சமாதானத் தீர்வுகாணு முகமாக பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின் நல்ல சூழ்நிலைகளைக் கொடுக்கும் நோக்கமுடையதாக இருக்கிறதென்று காஷ்மீர் வெளிவிவகார மந்திரி ஜனப் புட்டோ தெரிவித்திருக்கிறார்.

காஷ்மீர் எல்லையிலிருந்து துருப்புக்களை விலக்கிக்கொள்ள, இந்தியாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள பாகிஸ்தான் தயாராக இருக்கிறதென்றும் ஜனப் புட்டோ தெரிவித்தார்.

கராச்சியில் ஜனப் புட்டோ விடுத்த இந்த அறிக்கையில் பாதுகாப்புச் சபைக்கு இந்தியா அனுப்பிய ஆட்சேபக் குறிப்பு ஆத்திரமூட்டக் கூடிய முறையிலிருப்பதாகவும் இது சென்ற வருஷம் டிசம்பர் மாதம் 29-ம் திகதி சர்தார் சுவர்ண்சிங்கும் தானும் ய்து கொண்ட உடன்பாடுக்குட் முரணனதென்றும் கூறினர்.

ஐ. நா. பாதுகாப்புச்சபைத் தீர்மானங்களை இந்தியாதான் மீறியுள்ளதென்று ஜனப் புட்டோ தமது நீண்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## உணவு உற்பத்திக்கு அவுஸ்திரேலியா உதவி

கொழும்பு, புதன்

அவுஸ்திரேலியா அரசாங்கம் இங்கு உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக வழங்கவிருக்கும் உதவியை ஏற்றுக்கொள்ள காணி, விவசாய, நீர்ப்பாசன மந்திரி திரு. ஸி. பி. டி' சில்வா சம்மதம் தெரிவித்துள்ளார்.

நல்ல உரத்தை உபயோகித்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவ அவுஸ்திரேலியா முன்வந்துள்ளது.

தேயிலை ரப்பர், போன்ற பயிர்களுக்கு உரம் உபயோகிக்கப்பட்டுவந்தாலும் நெல் உற்பத்தியிலும் மற்ற உப உணவு உற்பத்தியிலும் இவ்விதம் உரம் அதிகம் உபயோகப்படுத்தப்படுவதில்லை என்றும் இவற்றை உபயோகிப்பதால் எவ்வித நன்மைபெறலாம்என்பதை இவ்வித பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் காட்டிக்கொடுக்க வேண்டுமென விவசாய அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கம் இலங்கைக்கு உணவு உற்பத்திப் பெருக்கத்தில் அளிக்கவிருக்கும் உதவித் திட்டத்தில் உரம் உபயோகிப்பது சம்பந்தமாக இலங்கையர்களுக்குப் பயிற்சியளிக்கும். இலங்கை பூராவும் விவசாய நிலையங்களில் இது உபயோகிப்பதால் எவ்விதம் விளைச்சலைப் பெருக்கலாம் என்பதையும் தெளிவுபடுத்தும்.

நகரசபைத் தேர்தல்

## ராஜதுரை போட்டியின்றி தெரிவு செய்யப்படலாம்

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு நகரசபைப் பொதுத் தேர்தல் ஜூன் மாதத்தில் நடைபெறவிருக்கிறது. மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை போட்டியின்றி அவரால் அமைக்கப்பட்ட இராஜதுரை புரத்தில் தெரிவுசெய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகியது.

நகரசபைத் தேர்தலில் கட்சிகள் நேரடியாகப் போட்டியிடுவதுபற்றி ஆலோசித்துவருவதாக அறியப்படுகிறது. கிழக்கிலங்கை அபிவிருத்தி முன்னணியினர் பெட்ரோலியம் கூட்டுத்தாபன உப தலைவர் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி தலைமையில் வாடிவீட்டில் கூடி நகரசபைத்தேர்தலுக்கு முன்னணி சார்பாக அபேட்சகர்களை நிறுத்துவதுபற்றி ஆராய்ந்தனர். புதிய கிளை ஒன்றினை அமைக்கவும் ஏற்பாடுகள் செய்துவருகின்றனர்.

நகரசபையில் புதிய வட்டாரங்களாக இராஜதுரை புரம், இருதயபுரம், ஜயந்திபுரம் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

இப்போதிருந்தே தேர்தலில் போட்டியிட விரும்பும் அபேட்சகர்கள் வாக்குதேடி வருகின்றனர்.

## சமையற்காரர் கூட்டுறவுச் சங்கம்

பாட்டியாலா, மார்ச் 27

பாட்டியாலா மன்னரிடம் பணிபுரிந்த 200 சமையற்காரர்களும் சேர்ந்து தங்களிடையே ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். ஆங்கில, பத்தான் சமையல் முறைகள் உட்பட, பலவகை சமையல் முறையும் தங்களுக்குத் தெரியுமென அவர்கள் கூறுகிறார்கள். இம்மாநிலம் முழுவதும் நடைபெறும் விருந்து விழாக்களுக்குத்தங்களால் வரமுடியும் எனவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

## மின்சார என்ஜினியர் பதவி உருவாக்க கோரிக்கை

### யாழ்.மாநகரசபை அங்கத்தவர்கள் கொண்டுவர விருக்கும் பிரேரணை

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாநகரசபையில் மின்சார என்ஜினியர் பதவியொன்றை உருவாக்கவேண்டுமென்றும் அதற்காக 1963-ம் வருடத்து வரவுசெலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட வேண்டுமென்றும் கோரும் பிரேரணை பற்றி ஆலோசனை செய்வதற்காக விசேஷ கூட்டமொன்று கூட்டப்படவேண்டுமென எட்டு அங்கத்தவர்கள் மேயரைக் கோரியுள்ளனர்.

திருவாளர்கள் கே. எஸ். நடராசா, பி. எம். ஜோன், எம். ஜேக்கப், ஏ. துரைரசசிங்கம், ஏ. ஜி. இராஜசூரியர், குவாஸி எம். எம். சுல்தான், என். தேவபாலசுந்தரம் ஹாஜி வி. எம். எம். அபுசாலி ஆகிய எட்டு அங்கத்தவர்களும் கையொப்பமிட்டு மேயருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

(அ) மின்சார என்ஜினியர் திரு. எஸ். நாகேந்திரத்துக்கு 1962-ம் வருடம் அக்டோபர் மாதம் முதல் திகதியிலிருந்து கொடுக்கவேண்டிய சம்பளத்தையும் அலவன்ஸையும் வழங்கும்படி மாநகரசபைக் கமிஷனருக்கு சபை அறிவிக்கிறது.

(ஆ) மின்சார என்ஜினியர் மீது எம். 2 325 இலக்கத்தில் தொடரப்பட்ட வழக்கை சபை வாபஸ்பெற விரும்புவதால் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனரை அட்டோர்ணி ஜெனரலுடன் தொடர்புகொண்டு இதுசம்பந்தமாக அவரது கருத்தை உடனே பெறுமாறு சபை கேட்டுக்கொள்கிறது.

(2) குருநகர் வீடமைப்புத் திட்டத்தில் மட்டுமே நகரசுத்தி வேலைக் [illegible]காணி தம்பிராஜா வேலை செய்யவேண்டும் என சபை கோருகிறது.

(3) ரக்கா மைதானத்தில் கட்டடம் கட்டுவதற்காக திரு. லோரன்ஸுக்கு ஒப்பந்தத்தில் கொடுக்கப்பட்ட நிலத்தை அவரிடமிருந்து பெற்றுமுன் அந்த இடத்திலிருந்த சந்தையைப் புதுப்பிக்குமாறு சபை கோருகிறது.

ரக்கா மைதானத்திலிருக்கும் விளையாட்டு மைதானத்தை வீடமைப்புத் திட்டத்துக்கென ஒதுக்கவேண்டுமென சபை கோருகிறது.

(4) ஈச்சமட்டை வீதியிலிருக்கும் மக்கிக் கிடங்கு நிலத்தை ஈச்சமோட்டை சனசமூக நிலத்துக்கென ஒதுக்கி விளையாட்டு மைதானமாக்க வேண்டுமெனச் சபை கோருகிறது.

---

மன்னர், புதன்

திருக்கேதீச்சர ஆலயத்தில் அலங்கார உற்சவ விழா ஏப்ரல் மாதம் 23-திகதி தொடக்கம் மே 8-ம் திகதி வரை நடைபெறவிருக்கிறது.

திருவிழா ஆரம்ப தினத்தன்று தொடக்கம் திருக்கேதீச்சர ஆலயத்தில் விசேஷ நவ கலச ஸ்நபன அபிஷேக பூசை வைபவங்களுடன் அலங்காரோற்சவம் ஆரம்பமாகும். அன்று கோணேச்சரப் பெருமானின் 'பாவநாசக' தீர்த்தத்தை திருக்கோணமலையிலிருந்து அடியார்கள் கொண்டுவந்து கௌரிநாயகி சமேத கேதீச்சரநாதருக்கு அபிஷேகம் செய்விப்பார்கள். இரவு சுவாமி அம்பாள் திருவுலாக்காட்சி நடைபெறும் தொடர்ந்து வரும் பதினைந்து தினங்களும் விசேஷ பூசை, அபிஷேகம், விழா நடைபெறும்.

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும் [illegible]றுணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

மெற்றசிஸ்ரொக்ஸ்

METASYSTOX

T'GRAMS ROYAEL ROYAL DISPENSARY PHONE 397 JAFFNA

3 வருஷ டிப்பசிட்
வட்டி
8%
சிலோன் றிசேவ்
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்

### தேவை

பிளேட்டன் [(காலால் இயக்கும்) அச்சு யந்திரத்தில் வேலை செய்யக்கூடிய அனுபவம் வாய்ந்த ஒருவர் உடனே தேவை. நேரில் வரவும். கோணேஸ்வர அச்சகம், திருக்கோணமலை. 808

### வீடு வாடகைக்கு

வண்ணார்பண்ணை, தட்டா தெருச் சந்திக்கு அண்மையில், ஐயனார் கோயிலடி வீதியில் எல்லா வசதிகளுடனும் உள்ள 28/1 இலக்க வீடு வாடகைக்குக் கொடுக்க இருக்கின்றது. தேவையானோர் கீழ்க்காணும் விலாசத்தில் அறியலாம். இந்துக் கல்லூரிக்கும், இந்து மகளிர் கல்லூரிக்கும் அண்மையில் இவ்வீடு இருப்பது குறிப்பிடத்தக்கது. தா. நவரத்தினம், (இளைப்பாறிய விதானையார்) ஐயனார் கோயிலடி, வண்ணார் பண்ணை. 799

### துவக்குத் தேவை

லைசன்ஸ் துவக்கு விற்பனைக்கு இருந்தால் கீழ்க்காணும் விலாசத்துக்கு 1-ம் திகதிக்கு முன்னர் அறியத்தரவும். குழலின் நீளம், துவக்கின் பெயர், விலை என்பன அமையவேண்டும். கு. பரமலிங்கம், C/o. பசுபதி ஆசிரியர், மேற்கு-நெடுந்தீவு. 817.

### தேவை

நேர்மை, திறமை வேண்டும்.

(அ) அலுவலகர்:- S. S. C. அல்லது G. C. E. (ஆங்கிலம், தமிழ் அல்லது சிங்களம்). சம்பளம் ரூ. 1800 - 72 - 2400 படி இல்லை. பிணை ரூ. 2500. உறுதி 5000 பெறுமதி.

(ஆ) வெளிவேலைப் பிரதிநிதி: தராதரம் J S.C. ஆங்கிலம், தமிழ் அல்லது சிங்களம்.

(இ) அபின்ருத்தியாளர்: S. S. C. அல்லது G. C. E. (ஆங்கிலம், தமிழ் அல்லது சிங்களம்). மனுப்பண்ணுக: மனேஜர், தபினுன்ஸ் அன் கரண்டி கம்பனி லிமிடெட், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 809

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணாநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாண நகர மத்தியில் நல்ல வசதிகள் நிறைந்த வீடு ரூ. 70 வாடகைக்கு இருக்கிறது. விபரங்களுக்கு: 'சூரியா', மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 818

ஆசிரியருக்குக் கடிதம்

# தோட்டத் தொழிலாளருக்கு பிரஜா உரிமை

ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் தோட்டங்களில் வேலை செய்வதற்காக பிரிட்டிஷ் ஆட்சிக்காரரால் தென்னிந்தியாவிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டு சட்டரீதியாக வேலைக்கமர்த்தப்பட்டவர்களின் சந்ததியினர்தான் இலங்கையில் தற்பொழுது தோட்டத்தொழிலாளர்களாக இருக்கும் 10 லட்சம் தோட்டத் தொழிலாளர்கள்.

உள்ளூரிலிருந்த தொழிலாளர்கள் இந்தத் தோட்டங்களில் வேலை செய்வது தரக்குறைவுஎனக்கருதி இங்குவேலை செய்ய விரும்பாததாலேயே பிரிட்டிஷார் அப்பொழுது தென் இந்தியாவிலிருந்து தொழிலாளர்களைக் கூட்டிவர வேண்டியிருந்தது.

இப்பொழுது இந்தத் தோட்டங்கள் பொன்னைக் கொடுத்துவருவதைக் காணும் இவர்கள் பொறாமை கொண்டு தோட்டத்தில் வேலை செய்து வரும் தொழிலாளர்களுக்கு அவர்களது உரிமையையும் உழைப்பின் ஊதியத்தையும் மறுப்பதோடு 'நாடற்றவர்'களென நாமம் சூட்டி அழைக்கவும் தொடங்கியுள்ளனர்.

இலங்கையிலுள்ள பெருந்தொகையான மக்களுக்கு உணவளித்தும் உதவியும் வருவதுடன் அரசாங்கத்துக்கு 75 சதவீதமான உழைப்பின் ஊதியத்தை அளித்து வருபவர்களுக்கு இவ்விதம் உரிமைமறுப்பது புத்ததர்மமாகுமா? அல்லது இதுதான் ஜனநாயகமா?

பொன் முட்டையிட்ட வாத்தைக் கொலை செய்து எல்லாவற்றையும் இழப்பது போன்று இருக்கிறது இவ்வித செய்கை. இப்பொழுது தோட்டத்தில் தொழில்புரியும் தொழிலாளர்களை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக உள்ளூரிலுள்ள தொழிலாளர்களை அந்த இடங்களில் வேலைக்கமர்த்தினால் அது இலங்கை அரசாங்கத்துக்குச் சாவுமணி அடிப்பது போன்றுதான் இருக்கும். தேசியமயமாக்கப்பட்ட கைத்தொழில்களுக்கு நேர்ந்தகதிதான் இதற்கும் நேரும்.

கள்ளத்தோணிகள் ஒருபடி அரிசியை 25 சதத்துக்குப் பெறுகிறார்களென்றும் குத்தகைக்குக் காணி எடுத்து விவசாயம் செய்யும் விவசாயிகள் ஒருபடி அரிசிக்கு 80 சதம் கொடுக்க வேண்டியிருக்கிறதென்றும் திரு. ஆர். ஜி. சேனநாயக்கா கூறியுள்ளார். இலங்கையிலுள்ள மக்கள் தமது முயற்சிக்குத் தக்கபடி பலனைப் பெறும்வரை இதில் ஆச்சரியப்படத்தக்க விஷயம் ஒன்றுமில்லை.

தோட்டத் தொழிலாளர்களை 'கள்ளத்தோணிகள்' என சில அரசியல்வாதிகள் குறிப்பாக திரு. ஆர். ஜி. சேனநாயக்கா, திரு. கே. எம். பி. ராஜரத்ன ஆகியோர் கூறுவது அநீதியானது. அவர்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்தென் இந்தியாவிலிருந்து இங்கு பிரிட்டிஷ்காரரால் சட்டரீதியாகக் கொண்டு வரப்பட்டவர்களின் சந்ததியினர்தான். இந்தப் பெயர்தான் தோட்டத்தில் வேலைபார்க்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசியல்காரணங்களுக்காகவும் முதலில் தோட்டங்களில் வேலைசெய்வது தரக்குறைவானது எனக் கருதிய சிங்கள மக்களுக்கு வேலை கொடுப்பதற்காகவுமே இந்த நாமம் இடப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பிலிருந்து வந்த இலாபத்தை அனுபவித்துவிட்டு அவர்களுக்கு மனித உரிமை மறுத்து 'நாடற்றவர்கள்' எனப் பெயர்சூட்டி அனுப்பிவிடுவது நீதியாகுமா? சரியாகக் கூறப்போனால் இவர்கள் (தோட்டத் தொழிலாளர்கள்) நாடற்றவர்களுமில்லை; கள்ளத்தோணிகளுமில்லை. மலைநாட்டுத் தோட்டங்களைப் பொன் கொழிக்கும் பூமியாக்குவதற்காக தென்னிந்தியாவிலிருந்து இங்குசட்டரீதியாகக் கொண்டுவரப்பட்டவர்களின் சந்ததியினர். இலங்கைப் பிரஜா உரிமை பெற இவர்கள் பூரண தகுதி பெற்றவர்கள். சிங்கள மக்கள் தமது உழைப்பின் பலனை அனுபவிக்க முடியுமானல் தோட்டத் தொழிலாளர்கள் பங்கீட்டரிசியைக் குத்தகைக்கு நிலமெடுத்து விவசாயம் செய்யும் விவசாயிடமிருந்து 25 சதத்துக்கு ஏன் பெறக்கூடாது.

அரசாங்கத்துக்குப் பெரும் பகுதியான வருமானம் தோட்டங்களிலிருந்துதான் கிடைக்கிறது. தோட்டத் தொழிலாளர்களின் வியவைத் துளிகளிலிருந்துதான் இதுகிடைக்கிறது. இந்த வருமானம் இலங்கை பூராவும் பங்கிட்டு அனுபவிக்கப்படுகிறது.

சில சிங்கள அரசியல்வாதிகள் இப்பொழுது தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களை நாடற்றவர்கள் என நீக்கிவிட்டு இவர்களது இடத்தில் சிங்களத் தொழிலாளர்களை நியமிக்க வேண்டுமெனக் கூறிவருகிறார்கள். சனத்தொகை பெருகிவருவதால் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது உண்மைதான். ஆனல் ஒரு சாராரை ஒதுக்கித் தள்ளாமல் இங்குள்ளவர்களுக்கு வேலை வழங்குவது அரசாங்கத்தின் கடமை. இவ்விதம் அரசாங்கம் செய்ய முடியாவிட்டால் இந்தநாட்டை ஆட்சிபுரிய அரசாங்கம் தகுதியற்றது.

கே, எஸ். சவுந்தரநாயகம்
மானிப்பாய்.

## மட்டக்களப்பில் மின்சார சீர்கேடு!

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு நகரப்பகுதியின் மின்சார விநியோகப் பொறுப்பு கல்லோயாச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டதினத்திலிருந்து நினையாத வேளைகளில் மட்டக்களப்பு நகரம் இருளில்மூழ்கும் நிலை சகஜமாகிவிட்டது.

மட்டக்களப்பில்இயங்கிவந்த மின்சார எஞ்சின் இயங்காமலிருப்பதால் இந்நிலை தொடர்ந்து நீடித்துவருகிறது. தவிர பெரும்புயல், பெருமழை பெய்யும் இரவுகளில் தடைபடும் மின்சாரம், புனிததினங்கள், முக்கிய நிகழ்ச்சிகள் உள்ள தினம், புதுபபடம் ஓடும் தினங்களில் 'மக்கர்' பண்ணுகிறது!

மட்டுநகர் தபாலகத்தில் தனிப்பட 'மின் எஞ்சினை' பூட்டியுள்ளனர். அதுகூட சில வேளைகளில் வேலைசெய்ய மறுக்கிறது!

## ஆனந்தனுக்கு சனசமூகநிலையம் வரவேற்பு

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடி சனசமூக நிலையத்தின் 15வது ஆண்டு நிறைவு விழாவன்று பாக்குநீரிணையை நீந்திச்சென்ற வீரனன வி. ஆனந்தனுக்கு வரவேற்பொன்றை நடத்துவதாக இன்று நடைபெற்ற விசேட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## "சிங்களம் மட்டும் சட்டம் கேலிக்கூத்து"

### ராஜரத்தின கூற்று

பண்டாரவளை, செவ்வாய்

சிங்களம் மட்டும் சட்டம் வெறும் கேலிக்கூத்து. அந்தச் சட்டம் அமுல் நடத்தப்படவில்லை; அரசாங்க இலாகாக்களில் உபயோகிக்கப்படவுமில்லை. என்று திரு. கே. எம். பி. ராஜரத்தின இங்கு நடைபெற்றதொரு பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

ஜாதிக விமுக்திப் பெரமுனை தலைவரும் வெளிமடை எம். பியுமான திரு. ராஜரத்தின மேலும் பேசுகையில், காலஞ்சென்ற தங்கள் தலைவரின் கொள்கைகளைப் பின்பற்றுவதாகத் தம்பட்டமடித்த இந்த அரசாங்கம் எல்லாவற்றையும் குளப்பியடித்துக் கொண்டிருக்கிறது என்றும் இன்றைய அரசாங்கம் யு. என். பி. அரசாங்கத்தைவிடத் திறமானதல்ல வென்றும் கூறினர்.

சில எம். பி. க்களுக்கு லஞ்சம் கொடுக்காமல் இன்னும் எந்த வேலையும் செய்ய முடியாதென்றும் திரு. ராஜரத்தின கூறினர்.

## வட்டுக்கோட்டையில் இளம்பிள்ளை வாதம் தடுப்பு நடவடிக்கை தீவிரம்

யாழ்ப்பாணம், வியாழன்

வட்டுக்கோட்டைப் பகுதியில் இளம்பிள்ளைவாத நோய் பரவுவதனைத்தடுக்கதீவிரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வட்டுக்கோட்டை பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் அ. செல்வரத்தினம் இதற்கான முயற்சியிலீடுபட்டு வருகிறார். யாழ்ப்பாணக் கல்லூரிச் சாரணர்படை இவ்விஷயத்தில் ஈடுபட்டுள்ளது. இச்சாரணர் படையினர் அராலி கிராமத்திற்குவீடுவீடாகச் சென்று கணக்கெடுப்புச் செய்து வருகிறார்கள். பல வினாக்களுக்கு பொதுமக்களிடமிருந்து விடைகளைப் பெற்றுவருகின்றனர். வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, சுளிபுரம் விக்டோறியாக் கல்லூரிகளின் சாரணர் படையினரும் இவ்விஷயத்தில் ஈடுபடவிருப்பதாக அறியப்படுகிறது.

வியாபாரம்பெருக
விளம்பரம்செய்க



## சவர 'பிளேடு'களுக்கு ரஷ்யாவில் பஞ்சம்!

வியன்னா, மார்ச் 24

ரஷ்யாவில் இளைஞரிடையே தாடி வளர்ப்பு மோகம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அங்கு வேடிக்கையான முறையில் பிளேடு பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இத்தகவலை ரஷ்யப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

மக்கள் பயன்படுத்தக்கூடிய பொருட்களுக்கு எந்த அளவுக்குத் தேவை இருக்கும் என்பதை ரஷ்ய திட்ட நிபுணர்கள் சரிவர மதிப்பிடாததே இதற்குக்காரணம் என்று குறை கூறப்பட்டுள்ளது.

"ரஷ்ய இளைஞரிடையே தாடி வளர்ப்பு மோகம் ஏற்பட்டு ஏராளமான இளைஞர்கள் தாடி வளர்க்க ஆரம்பித்ததைக்கண்ட ரஷ்ய திட்ட நிபுணர்கள் பிளேடுகள் விற்பனையாகாது என்று கணக்கிட்டு பிளேடு உற்பத்தியைக் குறைத்தனர்" என்று ரஷ்யப் பத்திரிகையான 'பிராவ்டா' தெரிவித்துள்ளது.

ஆனல் 'தாடி வளர்ப்பு' நாகரிகம் நீடிக்கவில்லை. எனவே சவர பிளேடு பஞ்சம் ஏற்பட்டது. தாங்கள் தப்புக்கணக்குப் போட்டதை நிபுணர்கள் உணர்ந்து பிளேடு உற்பத்தியை அதிகரிக்கக் காலம் தாழ்ந்து நடவடிக்கை எடுத்தபோதிலும் பிளேடு பஞ்சம் தீரவில்லை. சவர பிளேடுகளை ஏதோ தங்கம்போன்ற விலை மதிப்புள்ள பொருள்போலக் கருதி பலரும் இவற்றைவாங்கி பதுக்க ஆரம்பித்தனர். இன்னும் இந்த நிலை நீடிப்பதோடு வழக்கமான தேவைக்கும் அதிகமாக 4 மடங்கு அளவுக்கு ரஷ்யர்கள் பிளேடுகளை வாங்கிவருகின்றனர். எனவே ரஷ்ய திட்ட நிபுணர்களால் இன்னமும்கூட பிளேடுகளுக்கான தேவையைச் சரிவரக் கணக்கிடமுடியவில்லை.

இதேபோல மேஜை, நாற்காலி போன்ற மரச்சாமான்கள் விஷயத்திலும் குழப்படி ஏற்பட்டதாக மற்ரொரு ரஷ்யப் பத்திரிகையான 'இஸ்வெஸ்டியா' தெரிவிக்கிறது. மக்களின்தேவையைச் சரிவரக் கணக்கிடாமல் இவற்றைப்பெருமளவில் தயாரித்ததால் இவை விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. தவிர இவை மிக மோசமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதாக சமீபத்தில் நடத்தப்பட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

## இந்திராகாந்தி அமெரிக்கா சென்ருர்

புதுடில்லி, மார்ச் 27

ஸ்ரீமதி இந்திராகாந்தி நேற்றிரவு அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இவர் அங்கு பல சொற்பொழிவுகளை நிகழ்த்துவார்.

இந்திராகாந்தி ஏப்ரல் 14-ம் திகதி தமது சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு பாரதத்துக்குத் திரும்புவார்.

## 'சிகரெட் பிடித்தால்ஆபத்து'
### சிகரெட் பெட்டிமீது விளம்பரம்

நியூயார்க், மார்ச் 27

சிகரெட் சம்பந்தமாக நியூமெக்சிகோவில் புதுமையான சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன்படி இந்தமாகாணத்தில் விற்பனை செய்யப்படும் சிகரெட் பாக்கெட்டுகள் ஒவ்வொன்றின் மீதும் "எச்சரிக்கை! இப்பொருளை உபயோகிக்க ஆரம்பித்தால் அது ஒழியாத பழக்கமாகிவிடும் அத்தோடு இது உடல் நலத்துக்கு கெடுதி விளைவிக்கும்" என்று விளம்பர லேபில் ஒன்று ஒட்டப்படவேண்டும்.

## பாம்பை விழுங்கிய தவளை!

ரங்கூன், மார்ச் 24

சாதாரணமாக தவளையைத்தான் பாம்பு விழுங்கும். ஆனல் பர்மிய கிராமம் ஒன்றில் ஒரு தவளை சுமார் 3 அடி நீளமுள்ள பாம்பை விழுங்கியது. கிராமத்தில் வயல் வரப்பு ஓரமாக நடந்த இந்த அதிசய நிகழ்ச்சியை ஏராளமான மக்கள் நேரில் கண்டு அதிசயித்தனர்.

பெரும் "சாதனை"யைப் புரிந்த இந்தத் தவளை ஆமை அளவுக்கு உருவம் கொண்டதாகும். இந்த ராட்சதத் தவளையை தனது விஷப்பற்களால் கடிக்க மேற்படி பாம்பு 3 தடவை முயற்சித்தது. தவளையோ மிக லாவகமாக பாம்பிடமிருந்து தப்பியது. பாம்புக்கும் தவளைக்கும் நடந்த இந்தப் போராட்டத்தை மக்கள் ரசித்துக்கொண்டிருந்த போது அந்தத் தவளை தனது வாயை அகலமாகத் திறந்து விசித்திர ஒலியை கிளப்பி பாம்பை வசியப்படுத்துவதுபோல தனது பிதுங்கும் விழிகளால் உற்று நோக்கியது. இதேபோல தவளையை உற்று நோக்கிக்கொண்டிருந்த பாம்பு சற்று நேரத்தில் ஏதோவித சக்தியால் கட்டுண்டது போல கொஞ்சமும் எதிர்ப்புக் காட்டாமல் தவளையின் வாய்க்குள் புகுந்தது. சில நிமிஷ நேரங்களுக்குள் அந்தராட்சதத்தவளை 3 அடி நீளமான அந்தப் பாம்பை கபளீகரம் செய்தது.

புதுமையான 'விருந்தை' சாப்பிட்ட அந்தத் தவளைக்கு வயிறுபெருத்து சுமார் ஒரு மணி நேரத்திற்கு அங்குமிங்கும் நகரமுடியாது தவித்தது. பிறகு உண்ட களைப்புத்தீர, பக்கத்திலிருந்த குளத்திற்குள் சென்று மறைந்தது. இந்த அதிசய நிகழ்ச்சியைக் கண்ட கிராம வாசிகளில் சிலர் இந்தத் தவளைக்கு ஏதோ அதிசய சக்தி இருப்பதாகக் கூறிச் சென்றனர்.

## அந்நியமாதர் திருமணத்தடை!

டூனிஷ், மார்ச் 27

டூனிஷிய வாலிபர்கள் அந்நிய நாட்டுப் பெண்களைத் திருமணம் செய்வதைத் தடை செய்ய வேண்டுமென்று டூனிஷிய மாதர் தேசிய யூனியன் டூனிஷிய அரசாங்கத்தைக் கேட்டுள்ளது. இந்தக் கோரிக்கை டூனிஷியாவில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. இதை ஆதரித்தும் எதிர்த்தும் டூனிஷியப் பத்திரிகைகளில் ஆண்களும் பெண்களும் கடிதங்கள் எழுதிவருகின்றனர்.

## 'சோம்பிக் கிடக்கும் கப்பல்கள்'

லண்டன், மார்ச் 24

சென்ற மாதத்தின் தொடக்கத்தில் வேலை ஏதும் இல்லாததால் உலகம் முழுவதிலுமாக 4,200,000 டன் எடைகளுள்ள 648 கப்பல்கள் துறைமுகங்களில் சோம்பிக்கிடக்கின்றன. அதற்கு முந்திய மாதத்தில் 652 கப்பல்கள் அவ்வாறு இருந்தன.

## தண்ணீர்த்தகராறு தீர்க்க ஸ்தாபனம்

புதுடில்லி, மார்ச் 27

ராஜ்யங்களிடையே ஏற்படும் ஆற்றுத் தண்ணீர்த் தகராறுகளைத் தீர்க்கும்முகமாக ஒரு மத்திய ஸ்தாபனம் ஒன்றை அமைக்க ஆலோசனை செய்யப்பட்டுவருவதாக உதவி நீர்ப்பாசன இலாகா மந்திரி திரு. ஓ. வி. அழகேசன் தெரிவித்துள்ளார்.

## எரிமலை வெடித்ததால் 11,000 பேர் கொல்லப்பட்டனர்
### பாலித்தீவில் புதியதகவல்

ஜாகர்த்தா, மார்ச் 27

சென்றவாரம் பாலித்தீவில் எரிமலை ஒன்று வெடித்ததால் கொல்லப்பட்டவர்களின் தொகை 11,000 என இப்பொழுது தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால் 30 ஆயிரம் மக்களைக் காப்பாற்ற முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 4 லட்சம் மக்கள் வீடிழந்து தவிக்கின்றனர்.

எரிமலை வெடித்ததால் 26 ஆயிரம் ஏக்கர் நிலம் பொசுக்கப்பட்டதாகவும் இத்த நிலத்தில் 10 வருடங்களுக்கு எந்த விதபயிரும் பயிரிடமுடியாது என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது.

## பல்குடையும கருவியின் வேகம்!

லண்டன், மார்ச் 27

பல் மருத்துவத்துக்கான பல் குடையும் ஒரு கருவியை தென் இங்கிலாந்திலுள்ள போர்ன்மவுத் என்னுமிடத்திலுள்ள ஒரு நிறுவனம் செய்துள்ளது. இக் குடைவு கருவி வலியில்லாமல் இயங்கக் கூடியது. மணிக்கு 500 மைல் வேகத்தில் சுழலக் கூடியது. இன்னொரு சிறப்பென்னவென்ருல் கருவி இயங்கும்போது ஓசையிராது.

## ஏவுகணை நாசகாரி

லண்டன், மார்ச் 24

ஆருயிரம் டன் எடையுள்ளதும் சுமார் ரூ. 17 கோடி மதிப்புள்ளதுமான ஏவுகணை பொருத்திய பிரிட்டிஷ் நாசகாரிக் கப்பல் எச். எம். எஸ். ஹாம்ப்ஷயர், கிண்டுபேங் என்னுமிடத்தில் மிதக்கவிடப்பட்டது. (நேபன்)

## கதிரியக்க வளையம்

லண்டன், மார்ச் 24

வானமண்டலத்திலுள்ள அணுக்கதிரியக்க வளையம் அண்மையில் நடைபெற்ற அமெரிக்க அணுகுண்டு சோதனையின் விளைவாகக் கலைந்து நிற்பதாக அமெரிக்கவிஞ்ஞானி டாக்டர் ஜேம்ஸ் வேன் ஆலன் என்பவர் கூறினர். அந்த வளையத்தின் பெயர் "ஜேம்ஸ் வேன் ஆலன்" ஆகும்.

வளையம் கலைந்து நிற்பதால் அதுபற்றிய ஆராய்ச்சியைச் சிறிது காலத்திற்குச் செய்ய முடியாதென்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

## ஆங்கில நாட்டு மணி

லண்டன், மார்ச் 24

ஒலிக்கும்போது இசைநயம்பட ஒலிக்கும் 56 மணிகளையும் 4 1/2 கட்டை நீண்டு ஒலிக்கும் ஒலியமைப்புக்கொண்டதுமான கேரில்லான் மணியை இங்கிலாந்திலுள்ள ஒரு கம்பெனி அமெரிக்காவிலுள்ள வாஷிங்டன் எபிஸ்கோபல் மாதா கோயிலுக்காகச் செய்து முடித்துள்ளது.

இம்மணித் தொகுதி 57 டன் எடையுள்ளது. அவற்றில் பெரியது 10 டன் எடையுள்ளது. (நேபன்)

## தயார் நிலையில் பொலிஸாம் பட்டாளமும்
### தென் ஆபிரிக்காவில் நடவடிக்கை

ஜோஹனஸ்பர்க், மார்ச், 26

ஆபிரிக்க ரகசிய ஸ்தாபனத்திலிருந்து தொல்லை ஏற்படக்கூடும் என்ற எண்ணத்தில் ஒரு கவச மோட்டார் படையும் பொலிசும் தயார் நிலையில் வைக்கப்பட்டன.

அதிகார பூர்வமான அறிவிப்பு யாதும் வெளியிடப்படவில்லை. ஆனல் சந்தேகத்துக்கிடமானவர்களை வேட்டையாடுவதில் பொலிஸார் முனைந்துள்ளதாகத தெரிகிறது. இந்த வருடம் தென் ஆபிரிக்காவில் ஆட்சியைக் கைப்பற்ற ரகசிய இயக்கம் திட்டமிட்டுள்ளதாக கடந்த வாரம் பார்லிமெண்டில் ஓர் அறிக்கை தாக்கல் செய்யயப்பட்டது.

அனுமதியின்றி தங்கள் தங்கள் வீடுகளிலிருந்து செல்லக்கூடாது என்று ஜோகனஸபர்க் பிரதேசதிலுள்ள பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டிருப்பதாக தகவல்கள் கூறின.

பொலிஸ் ஸ்டேஷனுக்கு வெளியே ஆர்ப்பாட்டம் செய்த 67 ஆபிரிக்கர்களை பொலிஸார் சுட்டுக் கொன்ற ஷார்ப்விலி சம்பவத்தின் மூன்ருவது வருடாந்திர தினம் கடந்த வியாழக்கிழமை. அன்று ஏதாவது நடக்கும் என்று பரவலான வதந்திகள் தோன்றின.

## மின்சார சாமான் ஏற்றுமதி அதிகரிப்பு

லண்டன், மார்ச் 24

கடந்த வருடத்தில் பிரிட்டனிலிருந்து ரூ. 443 கோடி பெறுமான மினசார சாமான்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இது மிக அதிகபட்சமானதாகும். 1961-ம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்டதைவிட சென்ற ஆண்டில் ஏற்றுமதி 4.4 சதவீதம் அதிகரித்துள்ளது.

---

புதுடில்லி, மார்ச் 27

14 காரட் தங்கத்தைக் கொண்டு நவீன முறையில் புதுவிதமான உத்திகளைக் கையாண்டு நகைகளைத் தயார் செய்வதுபற்றி தேசிய நகைத் தொழில் கழகம் ஆராய்ந்து வருகிறது.

## வேலையற்றவர்கள் ஆர்ப்பாட்டம்
### பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு முன்னல்!

லண்டன், மார்ச் 27

நேற்று லண்டனில் பார்லிமெண்ட் கட்டடத்துக்கு முன்னல் சுமார் மூவாயிரத்துக்கு மேலான வேலையற்றவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இவர்கள் காமன்சபைக்குள் சென்று தமது ஆர்ப்பாட்டத்தை நடத்த முயற்சித்தபோது பொலிஸார் தலையிட்டுத் தடுத்து நிறுத்தினர்.

1930-ம் ஆண்டு நடைபெற்ற ஆர்ப்பாட்ட வரிசையில் அநாகரிகமான முறையில் இடம் பெற்ற ஆர்ப்பாட்டம் இது என வர்ணிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பல பகுதிகளிலிருந்தும் இரவிரவாக வந்துகூடி இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் ஆர்ப்பாட்டம் செய்யவேண்டாமென பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் பார்லிமெண்டுக்குள் இருந்து வேண்டுகோள் விடுத்தபோது அது கேட்காதவாறு இவர்களது கூச்சல் தடுத்ததுஎனத் தெரிகிறது.

## லாவோஸ் மன்னர்

புதுடில்லி, மார்ச் 26

லாவோஸ்மன்னர் சவனவதனவும், பிரதமர் சுவர்னபூமாவும் நாளை புதுடில்லி வருகிருர்கள். 3 நாள் இந்தியாவில் தங்கும் அவர்கள்ராஷ்டிரபதி. பிரதமர் ஆகியோரைச் சந்திப்பர்.

## ராஜரத்தின சேரமாட்டார்

வெலிமடை, செவ்வாய்

தமிழ்மொழியும் ஒரு அரசாங்க மொழியாக்கபபடவேண்டும் என்றும் இந்தியருக்குப் பிரஜாவுரிமை கொடுக்கப்பட வேண்டுமென்றும் இடதுசாரிக் கட்சியினரின் கொள்கை இருக்கும்வரை இடதுசாரிக் கட்சியினரின் ஐக்கிய முன்னணியில் தாம் சேரப்போவதில்லையென்று ஜாதிகவிமுக்திப் பெரமுனைத் தலைவர் திரு. கே. எம். பி. ராஜரத்தின அறிவித்துள்ளார்.

## பிடோல்ட் வெளியேறினர்

மூனிச், மார்ச் 27

பிரஞ்சு ஜனதிபதி டிகோலின் அரசியல் எதிரியும் பிரஞ்சு இரகசிய ஸ்தாபனத்தின் தலைவருமான திரு. பிடோல்ட் எதிர்பாராத விதமாக இன்று காலை இங்கிருந்து வெளியேறினர்.

பிடோல்ட் எங்கு சென்ருர் என்பதுபற்றித் தகவல் தெரியவில்லை யாயினும் அவர் போச்சுக்கலுக்குச் சென்றுகொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

## ஒரு லட்சம் நஷ்டஈடு
### மீன்பிடியாளருக்கு கொடுக்கப்பட்டது

கொழும்பு, புதன்

மீன்பிடியாளருக்கு நஷ்டஈட்டுப் பணமாக சென்ற ஐந்து வருடகாலத்துக்குள் ஒரு லட்சம் ரூபாயை மீன்பிடி இலாகா கொடுத்துள்ளது.

மீன்பிடி விபத்து நஷ்டஈட்டுச் சட்டத்தின் கீழ் இப்பணம் கொடுக்கப்பட்டுள்ளது.

**மணி வாசகம்**

நாங்கள் சுதந்திர மனிதர்களாக வாழமுடியாத போது சாவை எதிர்நோக்க வேண்டியதுதான்.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU: National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 15 உ (28-3-63)


## ஸ்தலஸ்தாபன சேவை

அரசாங்கசேவை மட்டுமன்றி ஸ்தலஸ்தாபன சேவையில் சேர முன்வரும் வாலிபர்களுக்குச் சிங்களமொழி தெரியவேண்டுமென்று நிபந்தனை போடப்படுகிறதாம். இதனால் சிங்களத்தைத் தாய்மொழியாகக்கொள்ளாதவர்களுக்குப் பெரும் சங்கடம் ஏற்பட்டு, அவர்கள் ஸ்தலஸ்தாபனங்களிலும் சேர்ந்து சேவை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அறிகிறோம்.

ஸ்தலஸ்தாபனசேவை அகில இலங்கைசேவையென்றும், அவர்கள் சிங்களவர் வசிக்கும் பகுதிகளுக்கும் மாற்றப்படக் கூடுமாதலால் அங்கு சென்று சேவைசெய்ய சிங்களம் தெரிய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக இதற்குக் காரணம் சொல்லப்படுவதாகத் தெரிகிறது. சிங்களம் பேசும் மக்களிடையே சேவை செய்ய வேண்டியவர்களுக்கு, அம் மக்களின் மொழி தெரியவேண்டியது அவசியமே அதேபோல தமிழ்பேசும் பகுதியில் சேவை செய்ய வேண்டியவர்களுக்குத் தமிழ்மொழி அவசியமில்லை என்று யாரும் சொல்ல முடியுமா? அரசாங்கசேவையிலோ, அன்றி ஸ்தலஸ்தாபன சேவையிலோ சேர விரும்புபவர்களுக்கு, அவர்கள் தீவின் எந்தப் பகுதிக்கும் மாறிச் சென்று தொண்டாற்றவேண்டிய நிலைமையில். சிங்களம், தமிழ் இரண்டு மொழிகளும் ஓரளவாவது தெரியவேண்டுமென்பதைப் பகுத்தறிவுள்ளவர்கள் மறுக்கமுடியாது.

என்றாலும் இந்தச் சேவையில் சேரவருபவர்களை, தமிழ் மொழி தெரியவேண்டுமென்று நிபந்தனை கேட்பதாகத் தெரியவில்லை. காரணம் சிங்களம் அரசாங்க மொழி என்று கூறப்படுகிறது. ஸ்தலஸ்தாபனங்களிலோ, அரசாங்கத்திலோ சேவைசெய்பவர் உண்மையில் பொதுமக்களின் ஊழியர்களே, ஆகவே பொதுமக்களின் மொழிகளாகிய சிங்களமும் தமிழும் அவர்களுக்கு ஓரளவாவது தெரிந்திருந்தாலே அவர்கள் தங்கள் சேவையைச் சரிவரச் செய்யமுடியும். தமிழை ஒதுக்கி, சிங்களம் மட்டும் தெரிந்தால் போதுமென்று கூறுவது, தமிழ் பேசும் மக்களுக்கு அநீதி செய்வதுடன் தமிழர் அந்தச் சேவையில் சேரமுடியாதபடி அவர்களைத் தடுக்கும் வேற்றுமை நடவடிக்கையுமாகும்.

கொழும்பு முதலிய நகரங்களிலே தமிழரும், சிங்களவரும் கலந்து வாழுகின்றனர்கள். இம் மக்களுக்குச் சேவைசெய்ய வேண்டிய அரசாங்க அல்லது ஸ்தலஸ்தாபன ஊழியர்களுக்கு இரு மொழிகளும் தெரிந்திருக்க வேண்டியது எவ்வளவு அவசியமென்பதை விளக்கத் தேவையில்லை. கொழும்பு மாநகரசபை நடவடிக்கைகளை சிங்களம், தமிழ், ஆங்கிலம் மூன்று மொழிகளிலும் பதிய சமீபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அங்கு வேலைசெய்யும் ஊழியர்களுக்கு மூன்று மொழிகளும் தெரிந்திராவிட்டால் மூன்று மொழிகளுக்கும் தனித்தனி மூன்று ஊழியர்களை நியமிக்க வேண்டி ஏற்படும். இதனால் நிர்வாகச்செலவும் மூன்று மடங்காகும். அரசாங்கத்திலோ அன்றி ஸ்தலஸ்தாபனங்களிலோ சேவை செய்பவருக்கு இம்மூன்று மொழிகளும் தெரிந்திருக்க வேண்டுமென்று நிபந்தனை போடுவதாயின் இன்றுள்ள மொழிப் பிரச்னையும் வெகுவாகத் தீர வழிபிறக்கும்.

இதுவரை ஒருவர் இம் மூன்று மொழிகளும் பயிலக் கூடியவிதத்தில் நமது கல்வி முறை இல்லை. அந்த வசதி செய்யப்பட்டிருந்தால் இன்று மொழிப்பிரச்னையே இங்கு ஏற்பட்டிராது. இது அரசாங்கத்தின் தவறு. இத்தவறைச் செய்த அரசாங்கமோ, ஒருவர் உத்தியோகம் பார்த்துக் கொண்டே சொற்ப காலத்துக்குள் புதிய மொழி அல்லது மொழிகளைக் கற்க வேண்டுமென்று நிபந்தனை போடுவது பெரிய இம்சையாவதுடன் அவர்கள் மேற்கொண்ட வேலையையும் திறமையாகவும் நிம்மதியாகவும் செய்ய முடியாது தடுப்பதுமாகும். நிர்வாகம் மேலாக நடைபெறவும் பொதுமக்களின் நன்மை பாதுகாக்கப்படவும் அரசாங்கம் இவ் விஷயத்தை அடியோடு புனராலோசனை செய்ய வேண்டியது அவசரமும் அவசியமுமாகும்.

விரைவில் குடியரசாக விருக்கும்

# நைஜீரியாவின் தலைவர் பலேவா

அல்ஹாஜி ஸர் அபூபக்கர் தஃபாவா பலேவா என்ற பெயர் கொண்ட நைஜீரிய தேசத்துப் பிரதமர் 5 கோடி மக்களின் அரசியல் தலைவர். வடக்குப் பிரஜா காங்கிரஸ் என்ற இந்நாட்டு ஆளும்கட்சி இவரைப் பிரதமர் பதவிக்கு ஏகமனதுடன் தேர்ந்தெடுத்தது. இக்கட்சியின் முதல்வர் ஸர் அஹ்மாடு பெல்லோ என்பவர். ஆகையால் பலேவா இக்கட்சியின் இரண்டாவது ஸ்தானத்தை வகிக்கிருர். இவர் ஹாஸா என்னும் கூட்டத்தை சேர்ந்தவர். இக்கூட்டத்தின் ஒருபகுதி ஹபே என்ற பெயர் கொண்டது. தலைவர் இப்பகுதியைச் சேர்ந்தவர். இந்நாடு ஆப்பிரிக்காவிலுள்ள மற்றைய நாடுகளைக் காட்டிலும் பெரிது. இது ஆங்கில மொழி பேசும் ஆபிரிக்கா நாடுகளுள் தேசிய உணர்ச்சியை முதல் முதலில் வெளிக்காட்டி அத்திக்கில் செயல்பட வழிகோலிப் பெருமையைப் பெற்றுள்ளது. ஒரு பெரிய நாட்டுப் பிரதமரான பாலேவா தோற்றத்தில் மிகவும் எளிய பொலிவுடன் ஒல்லியாகவும் பலமற்றும் கவர்ச்சியற்றும் விளங்குகிருர்.

அடிக்கடி நோயினுல் இடர்படுவதினுல் இவர் கலகலப்பில்லாமலும் இருக்கிருர். மகாத்மாகாந்தி அடிகள்போல் இருவரும் ஒருதுறவியின் வாழ்க்கையை நடத்துகிருர். ஓர் கீழ்த்தரமான குமாஸ்தாவைக் காட்டிலும் எளிய முறையில் இவர் ஜீவிக்கிருர் என்று சொல்லப்படுகிறது. இவர் மிருதுவான மெல்லிய குரலில் பேசும் பழக்கத்தைக் கடைப்பிடித்த போதிலும் பல தரப்பட்ட அமைச்சர்கள் கொண்ட மந்திரிசபையை மிகவும் உறுதியாகவும், திறமையாகவும் இயங்க வைக்கிருர். மற்ற அமைச்சர்களும் இவர்களிடம் பெருத்த அளவுக்கு மரியாதை செலுத்துவார்கள். "நாட்டு அரசியல் வாதிகளுள் இவர் மிகவும் நுண்ணறிவு படைத்தவர்" என்று அவர்கள் கூறுவார்கள். எளிய வாழ்க்கையில் இவருக்கு எவ்வளவு பற்றுஉண்டோ அவ்வளவுக்கு திறமையில் விசேஷ அபிமானம் உண்டு. தெற்கு நைஜீரியா வாசிகள் படாடோபத்திலும், ஆடம்பர வாழ்க்கையிலும் அதிக ஆர்வம் காட்டுவார்கள். பகட்டானவாழ்க்கையில் வெறுப்புக் கொண்ட பிரதமர் தனது கொள்கைக்கு மாறுபட்ட இயல்புடையவர்களுடனும் கூடி அரசியலிலும், நிர்வாகத்திலும் செயலாற்ற தன்னை பழக்கிக்கொண்டிருக்கிருர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு தஃபாவா பலேவா என்னும் ஓர் கிராமத்தில் பிறந்த தலைவா தனக்குப் பத்து வயதான பின்புதான் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கல்வி பயில ஆரம்பித்தார். தனது பதினுருவது வயதில் கட்ஸின ஆசிரியர் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் முறைகளைப் பயின்று பின்னர் ஆசிரியர் தொழிலில் அமர்ந்து கால அளவில் தலைமையாசிரியர் பதவியை வகிக்கலானுர். ஆங்கில மொழியைச் செவ்வனே பயின்றவர் ஆகையால் தலைவர் இம்மொழியைப் பேசுவதில் ஓர் ஆங்கிலேயரைக் காட்டிலும் மிகச் சிறந்தவர். அரசியலில் இவர் பங்குகொள்ளத் துவங்கிய காலத்தில் இவரைத் தென் நைஜீரியர்கள் "தங்கக் குரல் படைத்த வடக்கத்தியர்" என்று குறிப்பிடுவார்கள். 1945-ம் ஆண்டு இவர் இங்கிலாந்துக்கு விஜயம் செய்து அங்கு ஓராண்டு கல்வி கற்பிக்கும் முறைகளைக் கற்றுக்கொண்டார். இங்கிலாந்திலிருந்து தாய்நாடு திரும்பியதும் இவர் முறையே வட நைஜீரியா சட்டசபையில் அங்கத்தனராகவும், மத்திய சட்டசபையில் அங்கத்தினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1949-ம் ஆண்டு வரை ஆசிரியராகப் பணியாற்றிப் பின்பு மாநிலக் கல்வி அதிகாரியாகப் பதவி ஏற்ருர், வட நைஜீரியா ஆசிரியர்கள் சங்கத்திலும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அ பதவியில் சில காலம் செயலாற்றினுர், 1952-ம் ஆண்டில் மீண்டும் இவர் சட்டசபையில் தேர்வுபெற்று வடபகுதி அரசியல் தலைவர்களுள் சிறந்து விளங்கினர். வட நைஜீரியாவிற்கும் தென் நைஜீரியாவிற்கும் இவரை ஓர் இணைக்கும்பாலம் என்று நாட்டு மக்கள் கூறுவார்கள்.

1952-ல் இவர் மராமத்து இலாகா அமைச்சராகவும் 1954-ல் போக்கு வரத்து சாதன இலாகா அமைச்சராகவும்பணியாற்றினுர். 1955ல் இவர் யூ. எஸ்ஸுக்கு விஜயம் செய்து அங்கு மிஸிஸிபி ஆற்று போக்குவரத்து சாதன முறைகளைச் செவ்வனே பயின்று தாய்நாடு திரும்பி நாட்டிலும் அம்முறைகளைக் கையாண்டார். இது நாட்டுக்கு ஒரு பெருத்த சாதனை என்றுகூறப்படுகிறது. யூ. எஸ். விஜயத்தில் ந்யூ ஆர்லியன்ஸ் நகர் இவருக்கு கௌரவ பிரஜா



உரிமையை வழங்கி இவருக்கு மரியாதை செய்தது.

தற்காலத்தில் நைஜீரியாவிலும் மேற்கு ஆபிரிக்காவிலும் பிரசித்திபெற்ற தேசியத் தொண்டர் டாக்டர் நம்டி அஸிகிவே என்பவர், இவர் கவர்னர் ஜெனரல் பதவியை இன்று வகிக்கிருர். ஆனுல் இவரையும்விடச் சிறந்ததேசத் தொண்டர் பலேவா ஆவார். நைஜீரியா ஐக்கியநாட்டு சபையில் அங்கத்தினராக இடம் பெற்றதும் 1960-ம் ஆண்டு அக்டோபர் மாதம் இச்சபையில் இச்சந்தர்ப்பத்தையொட்டி பலேவா ஆக்கிய சொற்பொழிவின் தரத்தையும் ஆழத்தையும் இன்றும் மக்கள் பாராட்டுகிருர்கள். ஒரு ஆபிரிக்கநாட்டு நிர்வாகத் தலைவர் உலக சபையில் சொற்பொழிவாற்றி அதில் முதிர்ந்த அனுபவம், அரசியல் தந்திரம், முதலிய குணநிசயங்களை வெளிப்படுத்தியது இதுதான் முதல் தடவையாகும் என்று சொல்லப்படுகிறது.

தலைவருக்கு அரசியல் துறையில் விரோதிகள் இருக்கலாம். ஆனுல் அவர் நிர்வாகத்தில் குற்றம் குறைகூறுபவர்களைக் காண்பதரிது என்று சொல்லப்படுகிறது.

## இந்து அபிமானி காலமானர்

கொழும்பு, புதன்

இந்து சமயத்தில் அதிகம் பற்றுடையவரும், பிரபலமான வருமான திருமதி ராஜேஸ்வரி தம்பிமுத்து அண்மையில் கொழும்பில் காலமானுர்.

இவர் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற பண்டிதர் திரு ஏ. தில்லைநாதனின் பேத்தியும், வழக்கறிஞர் திரு. எஸ. கணபதிப்பிள்ளையின் மகளுமாவார்.

தனது கணவரையும் ரஜேந்திரம்ஸ லிமிட்டெட்டைச் சேர்ந்தவரும், மகனுமாகிய திரு. சிவானந்தனையும், மூன்று பெண் பிள்ளைகளையும், மருமக்களையும், சிதம்பரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலேயா, போர்னியோ ஆகிய இடங்களிலுள்ள இனத்தவர்களையும், திருமதி ராஜேஸவரி விட்டுச்சென்றுள்ளார்.

இவரது பூதவுடல் கொழும்பில் தகனம் செய்யப்பட்டது.

## கள்ளச்சாராயத்தில் கண்

பாட்டியாலா, மார்ச் 27

கள்ளச்சாராயம் வடித்தல், மதுக்களில் கலப்படம் செய்தல் ஆகியவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பை பஞ்சாப் மாநில ஆயத்துறை (எக்ஸைஸ்)யினர் ஏற்றுள்ளனர்.

சாராயக்கடை கண்ட்ராக்ட் தொகை ஆண்டுதோறும் போட்டியின் காரணமாக உயர்ந்து கொண்டே செல்கிறது. 1962-63-ம் ஆண்டுகளு ரூ. 50 லட்சத்துக்குக் கண்ட்ராக்ட் தொகை உயர்ந்துள்ளது.

## ஐயாறன் எழுதுவது

கொழும்பு விவேகானந்த சபை சமீபகாலமாக ஒரு நல்ல புதிய சேவையைச் செய்வதாக அறிகிறேன். ஒவ்வொரு கிழமையும், அங்கு கருத்தரங்கம் நடக்கிறதாம். சமய, சமூக சம்பந்தமான விஷயங்களை அதில் ஆராய்வதாயும், சில பெரியார்களையும் அனுபவஸ்தர்களையும் அழைத்து இதில் கலந்துகொள்ளச் செய்வதாகவும் தெரிகிறது. இதனுல் மக்கள் பல விஷயங்களைப் பற்றிச் சிந்திக்கவும். பயனடையவும்கூடியதாக இருக்கிறதாம். இந்தக் கருத்தரங்கிற்கு, சபைத் தலைவர் சபாநாயகமவர்கள்தான் தலைவராக இருந்து ஒழுங்கு செய்கிருராம். சபாஷ்!

* * *

சமய, சமூக விஷயங்கள் பலவற்றைக் குறித்து நம்மில் பலருக்கும் பரிசீலனை செய்யவோ சிந்திக்கவோ நேரமில்லை. சமயம் என்பது ஏதோ ஒரு சம்பிரதாய சடங்காகி வருகிறது. அதன் நோக்கங்களையும், வாழ்க்கையிலே நமக்கு அவற்ருல் ஏற்படக்கூடிய பயன்களையும் அறியாததால் சமய நம்பிக்கையை நம்மில் பலரும் இழந்துவருகிருேம்.

"நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா, நித்தம் எம்பெருமானுடைய கோவில் புக்கு..." என்று சமய குரவர் திருநாவுக்கரசர் இடித்துக் கூறியுள்ளார். என்ருலும் நம்மில் எவ்வளவு பேர் நித்தம் கோவிலுக்குப் போகிருேம்? கோவிலுக்குச் சென்று வழிபட்டால், பாவம், வினை எல்லாம் அறுபடுமென்றும், கவலைகள் நீங்குமென்றும், மலை மலையாகப் பாடிவைத்துள்ளனர். என்ருலும் நம்மில் பலரும் கோவிலுக்குச் செல்லுவதில்லை. நாமும் போகாமல், நம்மில் சிலரை சாதி காரணம் சொல்லி அவர்களும் போகக்கூடாதென்று தடுக்கிருேம். சமூகத்தின் உயர் நிலையமாக விளங்க வேண்டிய கோவில்களில், பலவும் இன்று அநேகமாகக் காலியாகக் கிடக்கின்றன.

கூட்டமெல்லாம் எங்கே? சினிமா சாலைகள், கள்ளுக்கடைகள் இவற்றின் முன்புதான். காசைக் கொடுத்து தேளைக் கொட்டிக்கொள்ளுவது போன்ற அவல நிலை ஏற்பட்டு வருகிறது. ஏன் மக்கள் கோவிலுக்கு வருவதில்லை. அவர்களை மீண்டும் கோவில்களுக்கு வரும்படி என்ன செய்யவேண்டும்? சமூக தேவைகளைக் கோவில்கள் மூலம் தீர்த்துக்கொள்ள முடியுமா? பெண்களின் விவாக விஷயமாக இன்றுள்ள பல சங்கடங்களையும் குறைக்க என்ன செய்யலாம்? படித்துவிட்டு வேலையில்லாமல் சங்கடப்படும் நம் வாலிபர்களுக்கு உதவ நாம் என்ன செய்யலாம்? இதுபோன்ற எவ்வளவோ விஷயங்களை, கருத்தரங்கிலே அவ்வப்போது விவாதித்தால், அனுபவமிக்க தாய்மார்களும் இவ்வித அரங்கில் கலந்துகொண்டால், எவ்வளவோ பயனேற்படலாம். சமயம் வெறும் அர்த்தமற்ற சம்பிரதாயமாகாமல், நமது சமூகக்குறைகள் தீரவும், நம் வாழ்வுக்கு ஆக்கம்தரவும் செய்யக்கூடும்.

இவ்வித நல்ல முன்மாதிரியை யாழ்ப்பாணம் உள்ளிட்டு இலங்கையின் எல்லா இடங்களிலும் பின்பற்றி ஆங்காங்கே கருத்தரங்கங்களை அமைத்து பயனுள்ள முறை

(5ம் பக்கம் பார்க்க)

# சட்டவிரோதக் குடியேற்றம்

## இந்திய அரசாங்கம் தடுப்பு நடவடிக்கை

கொழும்பு, புதன்

இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களைத் தடுப்பதற்கு தமிழ்நாடு அரசாங்க அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இந்திய அரசாங்கம் அதிக அதிகாரிகளை அமர்த்தி கடும் நடவடிக்கை எடுத்துள்ளது என்று இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷன் காரியாலயம் விடுத்த ஒரு அறிக்கை கூறுகிறது.

1954-ம் வருடத்திய இலங்கை – இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்தியாவின் தென்கரையிலிருந்து இலங்கைக்குச் சட்டவிரோதமாகக் குடியேறுபவர்களைத் தடுப்பதற்கு இந்திய அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்தியக் கடற் பிரதேசத்தில் இந்தியக் கடற்படையினரும் இந்திய பொலிஸ் படகுகளும் காவல் புரிகின்றன.

1960 – 61-ம் ஆண்டுகளில் இந்திய நீதிமன்றங்களில் 2000 பேருக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களுக்கு மட்டுமல்ல தரகர்கள், படகுக்காரர்கள், தண்டல்கள், படகுச் சொந்தக்காரர்கள் ஆகியோருக்கும் தண்டனை விதிக்கப்பட்டது.

சட்டவிரோதக் குடியேற்றத்தைத் தடுப்பது சம்பந்தமாக இலங்கை அரசாங்க அதிகாரிகளுக்கும் இந்திய அரசாங்க அதிகாரிகளுக்குமிடையில் அடிக்கடி மகாநாடுகள் நடைபெற்றன. 1958-ம் ஆண்டிலிருந்து இதுவரை 11 மகாநாடுகள் நடைபெற்றுள்ளன.

# குற்றவாளிகளைக் கொண்டு குடியேற்றிய நாடு குவலயத்தில் பெரிதாக வளர்ந்த விந்தை

சிட்னி, மார்ச் 24

இந்த ஆண்டில் ஆஸ்திரேலியா தனது 175-வது ஆண்டுவிழாவைக் கொண்டாடுகிறது. பெரிய தீவாகவும், உலகின் ஒரு கண்டமாகவும் கருதப்படும் ஆஸ்திரேலியாவில் தற்போது சிட்னியிருக்குமிடத்துக்கு அருகல் 175 ஆண்டுகளுக்கு முன்னல் பிரிட்டன் உரிமைக்கொடி நாட்டியது. குற்றவாளிகளுக்கான குடியேற்ற நாடாக ஆதியில் - ஆரம்பத்தில் ஆஸ்திரேலியா இருந்தது.

முதன் முதலாக 1788-ம ஆண்டில் ஆஸ்திரேலியாவுக்கு 11 சிறு கப்பல்கள் இங்கிலாந்திருந்து வந்தன. அவற்றில் 759 குற்றவாளிகள் தங்களுடைய 188 பெண்களுடனும், 13 குழந்தைகளுடனும் வந்தனர். 211 மாலுமிகள் தங்களின் 27 மனைவிமாருடனும் 14 குழந்தைகளுடனும் வந்தனர். கப்பல் படையினர் 210 பேரும் வர்த்தகக் கப்பலைச் சேர்ந்தவர்கள். 233 பேரும் ஆக 1487 பேர் வந்து குடியேறினர். தற்போது ஆஸ்திரேலிய மக்கள் தொகை 1 கோடியாக உயர்ந்துள்ளது.

குடியேறிய விழாவை - 175 - வது ஆண்டுவிழாவை ஆஸ்திரேலியர் இவ்வாண்டு மிகச் சிறப்பாகக் கொண்டாடப் போகிறர்கள்.

இன்று பிரிட்டனின் புற அரணாக இருக்கும் ஆஸ்திரேலியாவில் ஆங்கில ஸ்காத்லாந்திய, ஐரிஷ் மக்கள் தாம் ஆஸ்திரேலியராக வாழ்கின்றனர்.

கலைகளில் மட்டுமல்லாது அரசியல், தொழிலியல், வாணிபம் ஆகியவற்றில் பெருவளர்ச்சி ஏற்பட்டு, எதிர்காலத்தில் ஆசியாவின் தலைவிதியோடு தன்னைப் பிணைத்துக்கொள்ளும் தனிநாடாக ஆஸ்திரேலியா வளர்ந்து நிற்கிறது.

1788-ல் சிட்னியில் வாழ்க்கை தொடங்கியவர்கள் தங்களுடைய தலைவிதி ஆசியாவுடனே மற்றெந்த நாட்டுடனே இணைக்கப்படுமென்று கிஞ்சித்தும் எண்ணிப் பார்க்கவில்லை. எப்போது நாம் இங்கிருந்து சௌகரியமாக தாய்நாடான இங்கிலாந்துக்குத் திரும்புவோம் என்றுதான் இரவுபகலாக எண்ணிக்கொண்டிருந்தனர்.

அண்மைக்காலம் வரையில் ஆஸ்திரேலியாவில் வளர்ச்சி குறைவாகத்தான் இருந்தது. குற்றவாளிகளின் குடியேற்ற இடமாகவிருந்த ஆஸ்திரேலியாவுக்கு இங்கிலாந்திலிருந்து குற்றவாளிகளல்லாத மற்றவர் கப்பல் கப்பலாக வர ஆரம்பித்தனர். அவர்கள் வெற்றியையும் செழிப்பையும் புது நாட்டிலே காணத்துடித்துவந்தனர். ஆனல் வளர்ச்சி நத்தை வேகத்திலும் குறைவாக இருந்தது. 1815-ல் நாடு தோன்றி கால் நூற்றுண்டுக்குப் பின் 15000 பேர் வாழும் நாடாகவே இருந்தது.

ஆனல் 1850-ல் அங்கு தங்கம் கண்டுபிடிக்கப்பட்டதும் 10 ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவில் மக்கள் அணி அணியாகச் சேரலாயினர். 1860-ல் மக்கள் தொகை 146,000 ஆக உயர்ந்தது. இக்காலத்திலிருந்து குற்றவாளிகளை இங்கிலாந்திலிருந்து இங்கு அனுப்பும் வழக்கம் குறைந்து 1868-ல் சுத்தமாக நிறுத்தப்பட்டுவிட்டது.

தங்கத்தை நாடி மக்கள் அங்கே ஓடினர்கள். ஆனல் அவர்களை வாழவைத்தது ஆட்டு உரோமமான கம்பளிதான். அண்மைக்காலம்வரை கம்பளித்தொழிலே அங்கு பெரிய தொழிலாக இருந்தது.

கடந்த 15 ஆண்டுகளில் தான் மக்கட்தொகைப் பெருக்கத்திலும், பொருளாதார வளர்ச்சியிலும் ஆஸ்திரேலியா உச்ச நிலையை அடைந்தது. இந்தக் காலத்தில் அங்கே குடியேறியவர்கள் 2,000,000 ஆகும். உலகில் எந்தப் பகுதியிலும் இவ்வளவு பெரிய அளவில் மக்கள் குடியேறியதில்லை.

எண்ணெய் வளம் அங்கே கண்டுபிடிக்கப்பட்டதும் ஆஸ்திரேலியா ஏறுமுகம் காணலாயிற்று.

—

## லிஸ்பனில் பிடல்ட்

லிஸ்பன், மார்ச் 2

மேற்கு ஜெர்மனியிலிருந்து நேற்று வெளியேறிய மாஜி பிரெஞ்சு பிரதமர் திரு. பிடல்ட் போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் தங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் விவாதிப்பது நல்லதாகும். இவ்வித விவாதத்தில் யாரும் கலந்து கொள்ள முடிய வேண்டும். இதனுல் பலரது கருத்தை அறியவும், பிரிந்துள்ள பலர், ஓரிடத்தில் கூடி, கருத்துக்களைப்பரிமாறிக் கொண்டு, புதிய உறவுகளை வளர்க்கவும் முடியுமல்லவா? இதற்கு வழிகாட்டியாக முன் வந்துள்ள கொழும்பு விவேகானந்தசபையினரைப் பாராட்டுகின்றேன்.

* * *

நாயினுங் கடைப்பட்டேனை
நன்னெறிகாட்டி ஆண்டாய்
ஆயிரம் அரவம் ஆர்த்த
அமுதனே அமுதம் ஒத்து
நீயும் என் நெஞ்சின் உளளே
நிலாவினய் நிலாவி நிற்க
நோயவை சாருமாகில் நோக்கி
நீ அருள் செய்வாயே.

—திருநாவுக்கரசர்.

—

## பாலில் நீர் கலந்தார்

### அபராதம் ரூ. 100

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் மெயின் வீதியைச் சேர்ந்த மூர்த்திராசையா என்பவர் பாலில் 24 சதவீதம் தண்ணீர் கலந்த குற்றத்துக்காக யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் அவருக்கு ரூ. 100 அபராதம் விதித்தார்.

யாழ். நகர சபை உணவு இன்ஸ்பெக்டர் திரு. எஸ். ஆறுமுகம் வழக்கை நடத்தினர்.

—

## ஹால்டியாவில் துணைத்துறைமுகம்

கல்கத்தா, மார்ச் 27

மேற்கு வங்காள ராஜ்யத்தில் ஹுக்ளி நதியின் கழிமுகப்பகுதியில் உள்ள ஹால்டியாவில் துணைத்துறைமுகம் ஒன்றை அமைக்கலாம் என்று மத்திய சர்க்கார் கருதுகிறது. இந்த இடம் துணைத்துறைமுகத்தை அமைக்க ஏற்றதாக இருப்பதாக சர்க்கார் கருதுகிறது.

ஹால்டியா பகுதியில் இதற்கான வகையில் நதியில் நல்ல ஆழம் உள்ளது. ஆயினும் இது சம்பந்தமாக உள்ள சில பிரச்னைகளைப் பற்றி சர்க்கார் ஆராய்ந்துவருகிறது.

—

## “அரசியல் வேற்றுமையை மறந்துவிடுங்கள்”

அத்தனகலை, புதன்

நாம் ஒரு முன்னேற்றமடைந்துவரும் சமூகமாக மாற வேண்டுமானல் நாம் நமது அரசியல் கருத்து வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையுடன் உழைக்க வேண்டும் என உதவி சுகாதார மந்திரி திரு. ஜே. பி. ஒபயசேகரா ஐக்கிய பண்டகசாலை ஒன்றைத்திறந்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

அத்தனகலையில் கூட்டுறவுச் சங்கக்கிளை ஒன்றைத்திறந்து வைத்தபோது திரு. ஒபயசேகராபேசியதாவது:

இலங்கையில் கூட்டுறவுச் சங்கம் மிகமுக்கிய சேவை செய்து வருகிறது.

எங்கெல்லாம் இதன் கிளைகளைத் திறந்து வைக்க முடியுமோ அங்கெல்லாம் திறப்பதற்கு இலாகா திட்டமிட்டுள்ளது. மக்களின் நலன் கருதியே இவ்வாறு இலாகா நடவடிக்கை எடுத்து வருகிறது'

# சமசமாஜிகள் சும்மா இருக்கவேண்டும்

## சத்தியாக் கிரகம்பற்றி டாக்டர் கொல்வின்

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழரசுக்கட்சியினர் நேரடி நடவடிக்கை ஆரம்பித்தால் சமசமாஜக்கட்சியினர் என்ன செய்வதென்ற கேள்வியொன்று சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வந்து திரும்பிய சமசமாஜக் கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வாவிடம் கேட்கப்பட்டதாகவும் அதற்கு அவர் ‘ஆதரிக்கவும்வேண்டாம்எதிர்க்கவும் வேண்டாம். சும்மாபார்த்துக் கொண்டிருந்தால் போதும்' என்று கூறியதாகவும் அறியப்படுகிறது.

இடதுசாரி ஐக்கிய முன்னணி சம்பந்தமாகவும் வடபகுதியிலுள்ள சமசமாஜ வாலிப முன்னணி இயக்கங்களைப் பலப்படுத்துவது சம்பந்தமாகவும் வடபகுதி சமசமாஜப் பிரமுகர்களுடன் ஆலோசனை நடத்திவிட்டுத் திரும்பினர்.

## கைதிகள் நன்கு பாடம் படிக்கின்றனர்

லக்னோ, மார்ச், 25

இங்குள்ள மாதிரிச்சிறையில் 250 கைதிகள் உள்ளனர். சிறைப்பறவைகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுத்தர வேண்டுமென்ற சமூகக் கல்வித்திட்டத்தின் கீழ் அவர்களில் 220 பேர் பயன் பெற்று வருகின்றனர். தங்கள் கடிதங்களைத் தாங்களே எழுதவேண்டும் என்று விடுத்த வேண்டுகோளையொட்டி அவர்கள் தங்களுக்குத்தரப்பட்ட பாடங்களை நன்கு படிக்கவும் எழுதவும் ஆரம்பித்துள்ளனர். இவர்களுக்குப் புத்தகங்கள் வாங்குவதற்கென கைதிகள், முன்னுள் கைதிகளின் சங்கங்கள் ரூ 10 ஆயிரம் அளித்துள்ளன.

—

## வங்கத்துப் பட்டு வளர்ச்சித் திட்டம்

கல்கத்தா, மார்ச் 23

வங்கத்துப் பட்டுத் தொழில் வளர்ச்சிக்கென மேற்கு வங்க அரசினர் தொடர்ந்து பல நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கர்ச்யோங், மதிகரா, பியாஸ்பாரி, காளிதா, ராணகட், விஷ்ணுபூர், பெர்ஹாம்பூர், தேப்ரா ஆகிய இடங்களிலுள்ள பட்டுச் செடி வளர்க்குமிடங்களில் இன்னும் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடன் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இவற்றிடமிருந்து கடந்த ஆண்டில் ஏப்ரல்-செப்டம்பர் ஆகிய மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் 28 ஆயிரம் பட்டுச் செடிகள், 24 ஆயிரம் பட்டுக் கன்றுகள், 3000 ரூத்தல் பெறுமானமுள்ள பட்டுப் புழு முட்டைகள், ஆகியன கிடைத்தன.

பட்டுத் தொழில் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற 1963-64-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 3,24 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## ‘சோஷலிஸப் பாதையில் நாடு செல்கிறது’

கங்குருள்கெட்ட, புதன்

‘நாட்டின் பொருளாதாரம் நாட்டை விட்டுவெளியே சொல்லாதவாறு தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது' என்று உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன மைலாப்பிட்டியா வித்தியாலத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவின்போது பேசுகையில் கூறினர்.

‘மக்கள் வங்கி' எண்ணைக் கார்ப்ரேஷன், இன்சூரன்ஸ் காப்ரேஷன் இவை மூலம் நமது பணம் நாட்டுக்குள்ளேயே இருக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன' என மந்திரி மேலும் தெரிவித்தார்.

## இந்திய செருப்புகளுக்கு வெளிநாடுகளில் கிராக்கி

கல்கத்தா, மார்ச் 25

இந்தியாவில் தயாரிக்கப்படும் செருப்புகளுக்கு வெளிநாடுகளில் நல்ல கிராக்கி உள்ளது.

1961-ம் வருடத்தில் ஏப்ரல் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம்வரை இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு 14 லட்சத்து 63 ஆயிரம் ஜதை செருப்புகள் ஏற்றுமதியாகின. 1962-ம் ஆண்டில் ஏப்ரல் முதல் செப்டம்பர்வரை 16 லட்சத்து 77 ஆயிரம் செருப்புகள் ஏற்றுமதியாயின.

1960-61-ம் ஆண்டில் மொத்தம் சுமார் 49 லட்சம் ஜதை செருப்புகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனல் 1961-ம்62-ம் ஆண்டில் இது 46 லட்சத்து 62 ஆயிரமாகக் குறைந்தது.

—

## 90,000 டன் கப்பல் வெள்ளோட்டம்

மிகப்பெரிய ஜெர்மன் கப்பல் 90,000 டன் நிறையுள்ளது. இம்மாதம் ஹாம்பர்க்கில் மிதக்கவிடப்பட இருக்கிறது. இதன் நீளம் 860 அடி. ஜெர்மனியர்கள் அபூர்வமாக தயாரித்துள்ள 3000 டன் டாங்கி கப்பலைவிட இது பலவிதங்களிலும் நூதனமானது. இக்கப்பல் பல நூதன அம்சங்களைக் கொண்டதால் இது உலகக் கவனத்தைக் கவரும் என்று எதிர்பார்க்கலாம். இதில் டெலிவிஷன் ஏற்பாடுகளும் அமைக்கப்பட்டுள்ளன

## கலப்படம் செய்தவருக்கு ரூ. 75 அபராதம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த சரவில்லா மூலா அக்பரலி என்பவர் யாழ்ப்பாணம் மாநகரசபையைச் சேர்ந்த உணவுப் பரிசோதகர் திரு. எஸ். ஆறுமுகத்துக்கு இம்மாதம் 25-ம் திகதி 18 சதவீதம் இனம் தெரியாத வெளிநாட்டுப் பொருளொன்றை காப்பித்தூளுடன் கலந்து விற்றதாக யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் அவருக்கு ரூபா 75 அபராதம் விதித்தார்.

யாழ்ப்பாணம் மாநகரசபை உணவுப் பரிசோதகர் திரு. எஸ். ஆறுமுகம் வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

# வலி. வடக்கு ஆசிரியர்சங்க பேச்சு, சங்கீத போட்டிமுடிவுகள்

யாழ்ப்பாணம், வியாழன் வலிகாமம் வடக்கு ஆசிரியர் சங்கம் நடத்திய பேச்சு, சங்கீதப் போட்டிகளில் 200மாணவ மாணவிகள் பங்குபற்றினர். போட்டியில் வெற்றியீட்டிய வர்களின் பெயர் விபரம் வருமாறு:

## பேச்சுப்போட்டி

### கீழ்ப்பிரிவு (தமிழ்)

1. செல்வன் ஏ. பகீரதன் (அருணோதயக்கல்லூரி, அளவெட்டி), செல்வி வி. எம். இராஜேஸ்வரி (இந்துக் கல்லூரி, மல்லாகம்)

2. செல்வன் வி. குணலிங்கம் (அ. மி. பாடசாலை, காங்கேசன் துறை), செல்வி வி. சிவமலர் (அருணோதய, அளவெட்டி)

3. செல்வன் ஜே. எம். ஏ. எம். சயந்தகுமார் (சென். ஹென்றீஸ், இளவாலை),செல்வி வி. ஆர். சபாரத்தினம் (திருக்குடும்ப கன்னியர்மடம், இளவாலை.)

### மத்தியபிரிவு

1. செல்வன் ஏ. ஆர். இராசமாணிக்கம் (நடேஸ்வரா, காங்கேசன் துறை), செல்வி ஆர். துரைராஜா (ஸ்கந்தா, சுன்னாகம்).

2. செல்வன் செல்வரத்தினம் (மகாஜனா, தெல்லிப்பளை), செல்வி என். இந்திராணி(மகாஜனா, தெல்லிப்பளை.)

3. செல்வன் கே. சிவானந்தம் (மகாஜனா, தெல்லிப்பளை), செல் விக்னேஸ்வரி (யூனியன், தெல்லிப்பளை).

### மேற்பிரிவு

1. செல்வன் தர்மரத்தினம் (நடேஸ்வரா, காங்கேசன் துறை), செல்வி எஸ். சந்திராதேவி (அருணோதய, அளவெட்டி).

2. செல்வன் ஏ. நவரத்தினம் (அருணோதய, அளவெட்டி), செல்வி கே. தெய்வானைப்பிள்ளை (மகாஜனா, தெல்லிப்பளை).

3. செல்வன் என். கருணானந்தசிவம் (மகாஜனா, தெல்லிப்பளை), செல்வி டி. மதுரம் அருணோதயா, அளவெட்டி).

## ஆங்கிலம்

### மேற்பிரிவு

1. செல்வன். ஆர். விக்கினேஸ்வரன் (மகாஜனா) செல்வி. எச். ஐ. நீக்கிலாப்பிள்ளை (தி-கு. க. மடம் இளவாலை).

2. செல்வன். ரி. டி. சி பிலுப்புப்பிள்ளை (சென். ஹென்றீஸ் இள்வாலை) செல்வி. எஸ். செல்வதி (நடேஸ்வரா).

3. செல்வன். ஏ. டபிள்யு. ஜெயநாதன் (சென். ஹென்றீஸ் இளவாலை) செல்வி. ஜே. கந்தையா (தி. கு. க. மடம் இளவாலை)

### மத்திய பிரிவு

1. செல்வன். எம். திரு. ஞானசம்பந்தன் (மகாஜனா), செல்வி. எம். டி. பி. யோசப் (தி. கு க. மடம் இளவாலை).

2 செல்வன். வி. ஜெயரத்தினம் (மகாஜனா) செல்வி. எம். பிரேமாஞ்சினி (யூனியன்).

3. செல்வன். சி. இராமதாஸ் (மகாஜனா), செல்வி. எம். ஜே. ஜெக்கிம (தி. கு. க. மடம் இளவாலை).

### கீழ்ப்பிரிவு

1. செல்வன் எஸ். விக்கினேஸ்வரன் (ஸ்கந்தா), செல்வி ஜி பிரேமா (யூனியன்).

2. செல்வன் ஜே. எம். ஏ. எம. சுபந்தகுமாரன் (சென். ஹென்றீஸ் இளவாலை), செல்வி சுகனாராணி (யூனியன்).

3. செல்வன் எஸ். வசந்தன் (ஸ்கந்தா), செல்வி எஸ். சுமுத்திராதேவ (யூனியன).

## சங்கீதப் போட்டி

### மேற்பிரிவு ஆண்கள்

1. எம். ஜி. இராஜநாதன் (மத்திய மகாவித்தியாலயம் வசாவிளான்).

2 எஸ். மார்க்கண்டேய சர்-(அருணோதயா)

3. எம். தங்கராசா (ஸ்[illegible])

### கீழ்ப்பிரிவு

1. ஏ. திலகேஸ்வரன் (அருணோதயா).

2. எஸ். விக்கினேஸ்வரன் (ஸ்கந்தா).

3. எஸ். ஜி.தனிநாயகம் (மத்திய மகாவித்தியாலயம்) வசாவிளான்).

### கீழ்ப்பிரிவு பெண்கள்

டி. ரோகிணி (ஸ்கந்தா), பிரேமதேவி (மத்திய மகாவித்தியாலயம்), டி. சித்திரா (ஸ்கந்தா).

# 'அரசாங்க உத்தியோகம் இனிக் கிடைக்காது'

## நிதிமந்திரி அறிவிப்பு

கலிகமுவ, செவ்வாய் "உத்தியோகத்தை இனி எதிர்பார்க்கவேண்டாம். அரசாங்க உத்தியோகங்களுக்கான செலவைக் குறைப்பதற்கு நான் உத்தேசித்துள்ளேன். எனவே அரசாங்கஉத்தியோகங்களை நம்பி இருப்பதில் பயனில்லை" என்று நிதிமந்திரி பி. பி. ஜி. கலுகலல கரண்டு பொன என்ற இடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு மனப்பூர்வமாக உழைக்கும்படி திரு. கலுகல்ல மக்களைக் கேட்டுக்கொண்டார். "ஒவ்வொரு அங்குல நிலத்தையும் விவசாயத்துக்குப் பயன்படுத்த வேண்டும். சும்மா கிடக்கும் தரிசு நிலங்கள் யாவும் பகிர்ந்து கொடுக்கப்பட்டு அதைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் பண உதவியும் கொடுக்கும். நிதி நெருக்கடி விரைவில் தீர்க்கப்பட்டது" உணவுப்பிரச்னையும் தீர்க்கப்பட்டுவிடும். எங்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப்பொருள்களுககாக சென்ற இரண்டு மூன்று வருடங்களுக்குள் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் வெளியே அனுப்பப்பட்டன. நெல்விளைச்சலை அடுத்தவருடத்தில் நாம் இரட்டிப்பாக்கவேண்டும். இதற்கு அரசாங்கம் உதவி செய்யும் என்று நிதிமந்திரி கூறினார்.

நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு யு. என். பி. சேவை செய்திருக்குமானால் இன்றைய நிதிநெருக்கடி ஏற்பட்டிருக்க மாட்டாது என்றார். நிதிநெருக்கடியை அரிசிப் பங்கீட்டுப் புத்தகத்திலோ, நெல் உத்தரவாத விலைத் திட்டத்திலோ கைவைக்காமல் தாம் தீர்த்துவிடமுடியுமென்ற நம்பிக்கை தனக்கிருக்கிறதென்றும் திரு கலுகல்ல கூறினார்.



## வானொலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 28-3-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம்' 6-50 சைவற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரக்கானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்தின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக்கோஷ்டி,.

இரவு 7-00 டி. எஸ். அம்பலவாணர் — பேச்சு, 7-15 நேயர்விருப்பம், 7- 45 'மனோரஞ்சிதம்' — தொடர் நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 லயவின்யாசம், 9-30 குரல் வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 கே. சி. காளிதாஸ் —பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கே. சி. காளிதாஸ் — பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை, 2-10 தொழிலைத் தேர்ந்தெடுக்க — மாணவருக்கு வேலை வாய்ப்புக்கள், 2-40 ஜெயபேரிகை — வாத்தியஇசை.

மாலை 4-45 விவதபாரதி(கர்நாடக சங்கீதம்) 5-45 வாத்தியஇசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப்பாடல், 7-35 ஆர். வேங்கடராமன் — பேச்சு, 7-45 ராகம், தானம், பல்லவி – எஸ். நரசிம்ஹலு — பாட்டு, 8-40 திரைப் படஇசை, 9-15 சுபத்தசங்கீதம், 9-30 ஞானச்சுடர் —ஸ்வாமி விவேகானந்தர் பற்றிய சித்திரம்.

—

## மட்டக்களப்பில் மழை

மட்டக்களப்பு, செவ்வாய்

மட்டக்களப்புப் பகுதியில் திடீரென தொடர்ந்து மூன்று தினங்களாகப் பெரு மழை பெய்ததன் விளைவாக ஆயிரக்கணக்கான அறுவடை செய்யப்பட்ட வயல்கள் பாதிக்கப்பட்டன. ஆற்றுவாயை அண்டியுள்ள பகுதிகளில் வெள்ளம் அறுவடைக்கதிர்களை அள்ளிக்கொண்டு போய்விட்டது. இத்திடீர் விபரீதத்தில் ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

—

## வேலணை மத்திய மகாவித்தியாலயம் உடற்பயிற்சியில் முதலிடம்

வேலணை, புதன்

தீவுப்பகுதிப் பாடசாலைகளின் உடற்பயிற்சிவிழா வேலணை மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. தீவுப்பகுதியைச் சேர்ந்த பாடசாலைகள் ஐந்து இப்போட்டியில் கலந்துகொண்டன. ஆண்களில் வேலணை மத்திய மகாவித்தியாலயமும் பெண்களில் கரம்பன் சண்முகநாத வித்தியாசாலையும் முதலாமிடத்தைப் பெற்றன.

## பாரதி இளைஞர் கழகம்

வேலணை, புதன்

வேலணை பாரதி இளைஞர் கழகத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் கூடியபோது கழகத்தின் கிளையொன்றை கொழும்பிலும் அமைக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதற்கு நால்வர் கொண்ட அமைப்புக்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

—

## பொதுநல சேவா மன்றம்

வேலணை, புதன்

வேலணை வடக்கு பொது நல சேவாமன்ற அங்குரார்ப்பணக்கூட்டம் அண்மையில் திரு. சே. க. படிகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. வேலணை வடக்குக் கிராமம் பலராலும் புறக்கணிக்கப்பட்டு பின் தங்கிவிட்டது என்ற கருத்து கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. விரைவில் வட மாகாண அதிபரையும் தீவுப் பகுதிக் காரியாதிகாரியையும் அழைத்துப் பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது. பின் வருவோர் மன்ற நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

போஷகர்கள்: அரசாங்க அதிபர் திரு. வி. பி வித்தாச்சி, திவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. சாமுவேல் தம்பையா, வேலணை கிராமசபைத் தலைவர் திரு. க. சதாசிவம். தலைவர்: திரு. சே. க படிகலிங்கம். செயலாளர்: திரு மு. வ. மாணிக்கவாசகர். பொருளாளர்: திரு, ந. வீரசிங்கம்.

—

## மட்டக்களப்பில் பெரிய கிரிக்கட் போட்டி

மட்டக்களப்பு, செவ்வாய்

மட்டக்களப்புப் பகுதியில் 'பெரிய கிரிக்கட் போட்டி' எனக்கணிக்கப்படும் ரசிகர்கள் உள்ளம் கவர்ந்த, மட்டுநகர் மெடிஸ்த மத்திய கல்லூரி, அர்ச். மைக்கேல் கல்லூரிகளுக்கிடையிலான போட்டி வெள்ளிக்கிழமை பிற்பகல் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவிருக்கிறது.

இப்போட்டியில் பங்கு கொள்ளும் இருகோஷ்டிகளும் பிரத்தியேகமாக இம்முறை பல பயிற்சி ஆட்டங்களில் ஏற்கனவே ஈடுபட்டு வந்திருப்பதுடன் பல முதல் தர வீரர்களை உள்ளடக்கியதாக இருக்கிறது. வருடா வருடம் ஏராளமான ரசிகர்களின் கண்களை ஈர்க்கும் இப்போட்டியைக் கண்டு களித்து ஊக்கம் காட்ட இரு கல்லூரிகளினதும் பழைய மாணவர்கள் சங்கம். சங்கத்தின்சார்பில் பிரமுகர்களுக்கும், பழை மாணவர்களுக்கும் அழைப்புகளை விடுத்திருக்கிறது.

—

## இலட்சார்ச்சனை

சுழிபுரம், புதன்

சுழிபுரம்-பறளாய் சிவசுப்பிரமணியசுவாமிக்கு இலட்சார்ச்சனை ஆரம்பமாகி நடைபெறுகிறது. வருகிற சனிக்கிழமை இரவு அர்ச்சனையுடன் இலட்சார்ச்சனை நிறைவு பெறும். அபிஷேகங்கள், விசேஷ தீபாராதனைகள், மகாயந்திர பூஜைகள், நியாஸபூர்வஷண்முகார்ச்சனைகள் நடைபெறவிருக்கின்றன.

—

பண்ணாகம், புதன்

பண்ணாகம் தெற்கு விசவர்த்தனை முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. பத்துத்தினங்கள் ஆலய உற்சவம் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை பண்ணாகம் தெற்கு ஸ்ரீ முருகன் மாணவர் தேர்ச்சிச் சங்கம் செய்துவருகிறது..

## அருந்ததியர் சங்க நிதிக்குழு

கொழும்பு, புதன்

அகில இலங்கை அருந்ததியர் சங்கப் பொதுக் குழு கூட்டம் அதன் தலைவர் திரு. எஸ். சுந்தரராஜ் தலைமையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

1. சமூக மக்களின் நன்மைக்கான பூர்வாங்கப் பொருளாதாரத் திட்டம் பொதுக் குழுவினரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு அதன் வெற்றிக்கு நிதிக்கமிட்டி ஒன்றைத் தெரிவு செய்து அது வகுத்துக் கொடுக்கும் வழிமுறைகளால் இப்பொருளாதாரத் திட்டம் நிறைவேற்றுதலுக்குச் சங்கம் முழுமூச்சாக ஆவன செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

2. இப்பொருளாதாரத் திட்டத்திற்கான வழிமுறைகளை வகுத்துக்கொடுக்க 17 பேர்களைக் கொண்ட நிதிக்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டது.

3. கௌரவ பொதுச் செயலாளரின் விலகல் கடிதம் பொதுக் குழுவில் வாசித்தளிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

**நிதிக்குழுஉறுப்பினர்கள் வருமாறு:**

திருவாளர்கள் கு. யா. திராவிடக்கழல், எம். எம் சுந்தரராஜ், எஸ். சுந்தரராஜ், மா. சோலை, சாமியார் மூக்கன், வெ. ச. பெருமாள், ஆ. சுப்பிரமணியம், பெ. சண்முகவேலு, என். கே. குருசாமி, பெ முனிசாமி, எம். பி. இராமையா, எம். பலவாசம், செ. மு. இராமையா, எஸ். போல், பி. வேலு, மூ. வேலாயுதம், அ. பொன்னையா.

—

## வெற்றி தோல்வி இன்றிமுடிவு

உடுப்பிட்டி, புதன்

நெல்லியடி சனசமூகத்தின் 'ஏ' பிரிவினருக்கும் 'பி' பிரிவினருக்குமிடையே நெல்லியடி சனசமூக விளையாட்டுத்திடலில் நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் இரு ஆட்டங்களும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

குச்சவெளி பொலிஸ் அதிகாரி என். பாஸ்கரன் மத்தியஸ்தராகக் கடமை புரிந்தார்.

# 'டாக்டர் பெரேரா ஒரு மாபெருந் தலைவர்'

## உதவிமந்திரி புகழ்மாலை

தெரணியகலை, செவ்வாய்

"எந்தப்பிரச்னையும் தனக்கு ஒரு பெரியபிரச்னையாக கருதாத மாபெரும் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா, 1935-ம் ஆண்டிலிருந்து, இந்த நாட்டில் ஏகாதிபத்தியத்தை அவர் எதிர்த்துப் போராடி வந்துள்ளார். அவருடைய வாழ்நாள் முழுவதையும் இலங்கையின் நலனுக்காகவே செலவிட்டுள்ளார்" என்று போக்குவரத்து மராமத்து உதவி மந்திரி திரு. டி. பி. தென்னக்கூன் எட்டியாந் தோட்டைத் தொகுதியில் பொலத்தகம என்ற இடத்தில் புதிய உபதபாற்கந்தோரைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

திரு தென்னக்கூன் மேலும் பேசுகையில், மக்களின் உரிமைக்காகப் போராடியவர்களில் டாக்டர் பெரேராவும் ஒருவர் என்றும் தனது தொகுதி மக்களுக்காக மட்டுமல்ல ஜாதி, இன, மதபேதமின்றி இலங்கை முழுவதற்கும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளவர் என்றும் நாடு அவருக்கு என்றும் கடமைப்பட்டுள்ளதென்றும கூறினர்.

டாக்டர் என்.எம். பெரேரா பேசுகையில் திரு. தென்னக்கூன் ஒரு அதிஷ்டசாலியென்றும் அவர் எதைத்திறந்து வைத்தாலும் அது நன்குவளர்ச்சிபெறுகிறதென்றும் கூறினர்

## நந்ததேவி சிகரத்தில் இலங்கை இளைஞர்

கொழும்பு, புதன்

இமயமலையில் 25,024 அடி உயரமுள்ள நந்ததேவி சிகரத்தில் ஏறுவதற்கு இலங்கையைச் சேர்ந்த இளைஞர் நெவில் பெரேரா முயற்சிப்பார். இவருடன் இந்திய நண்பர்கள் சிலரும் துணையாகச் செல்வர்.

20 வயதுக்கும் குறைவாகக்காணப்படும் இந்த இலங்கை இளைஞர், இலங்கைப் பல்கலைக் கழகத்தில் படித்துவருகிருர். இமாலய உச்சியில் ஏறும் முதல் இலங்கையராக இவர் இருப்பார்.

## க்ஷயரோக நிவாரணச் சங்கம்

### இம்மாத இறுதியில் மகாநாடு

கொழும்பு, புதன்

இலங்கை க்ஷயரோக நிவாரண தேசிய சங்கத்தின் இணைசங்கங்களின் அகில இலங்கை வருடாந்த மகாநாடு இம்மாதம் 30, 31ந் திகதிகளில் கொழும்பில் நடைபெறவிருக்கிறது. இம்மகாநாட்டை சுகாதார அமைச்சர் திரு. ஏ. பி. ஜெயசூரியா, சபைத்தலைவர் டாகடர் ஜே. ஏச். எப். ஜெயசூரியாஎன்போர் தொடக்கிவைப்பர்.

மகாநாட்டில் ஆராய்ச்சிச் சொற்பொழிவுகளும்கலந்துரையாடலும், விசேஷ நிகழ்ச்சிகளாக நடைபெறவிருக்கின்றன. வலிகாமம் மேற்குக் கிளையில் இருந்து பலர் இம்மகாநாட்டில் கலந்து கொள்ளவிரும்புகின்றனர். இக்கிளையைச் சேர்ந்த டாக்டர் ஏ. செல்வரத்தினம் வைத்திய ஊழியர் க்ஷயரோகத் தடையில் எடுக்கக் கூடிய பிரயத்தனங்கள் என்பதுபற்றியும் முகாந்திரம் இ. பி. இராசையா கிளைச்சங்கங்கள் முயற்சியுடன் கருமமாற்ற முடியாததிலுள்ள பிரச்னைகள்' என்பது பற்றியும் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்த விருப்பதாகத் தெரிகிறது.

இம்மகாநாட்டிற்கான ஏற்பாடுகள் துரிதமாகச் செய்யப்பட்டுவருகின்றன. இலங்கையின் பலவேறிடங்களிலுமுள்ள கிளைச்சங்கங்கள் இம்மகாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கின்றன.

—

## மட்டக்களப்பு மக்கள்

### நீதிபதி பாராட்டு

மட்டக்களப்பு, புதன்

'மட்டுநகர் மக்கள் கலை ஆர்வத்தையும் பண்புள்ளத்தையும் என்னல் என்றுமே மறக்க முடியாது' என்று மட்டக்களப்பு சிறுவர் கலைக்கழகத்தினர் அளித்த பிரியாவிடை உபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப்பேசிய மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை குறிப்பிட்டார்.

விக்டோறியா மண்டபத்தில் நடைபெற்றஇவ்வைபவத்திற்கு கழகப் போஷகர் மாஸ்டர் சிவலிங்கம் தலைமைவகித்தார்.

செல்விகள் வனஜா பரம், வனிதா ஞானசூரியம், பவானி குமாரசுவாமி, நவமலர் தம்பிப்பிள்ளை, ஜெயலட்சுமி சிவசுப்பிரமணியம் ஆகியோர் நீதிபதி அவர்களை வாழ்த்திப்பாடினர்.

கழக இணைச் செயலாளர்களிலொருவரான செல்வி இரவீந்திரா, இராசதுரையின் பாராட்டுரைக்குப் பின்னர் செல்வி நளினி இராமச் சந்திரன் பிரியாவிடைப் பத்திரம் வாசித்தளித்தார். ஈற்றில் தேநீர் விருந்தும் நடைபெற்றது.

—

## ராணி திரும்புகிருர்

லண்டன், மார்ச் 27

நியூஸிலாந்திலும் ஆஸ்திரேலியாவிலும் தங்கள் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்ட எலிஸபெத் ராணியும் எடின்பரோ கோமகனும் இப்பொழுது லண்டன் திரும்பிக்கொண்டிருக்கின்றனர்.

# 'டிப்ளோமா' பட்டப் பயிற்சி இனிஇல்லை?

கொழும்பு, புதன்

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சிங்கள, தமிழ் 'டிப்ளோமா'ப்பட்டத்துக்கு இப்பொது படித்துக் கொண்டிருப்பவர்கள் தங்கள் படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறியதும் 'டிப்ளோமா'ப்பட்டப் படிப்புப் பகுதி மூடப்படவிருக்கிறது. 'டிப்ளோமா' பட்டப் படிப்புக்கு இவ்வருடம் ஜூன் மாதம் ஆரம்பமாகும் கல்வி வருடத்துக்கு எவரும் தெரிவு செய்யப்படமாட்டார்களென பல்கலைக்கழக வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இந்தப் பிரிவை மூடுவதற்குக் கூறப்படும் காரணங்களில் ஆசிரியர்களே அதிக அக்கறை கொள்ளாதது ஒருகாரணமென்றும் அவர்கள் 'டிப்ளோமா' பட்டம் பெற்று வந்த பின்பு அவர்கள் எடுத்த சிரமத்துக்குப் போதிய பயன் இல்லாததுதான் இதன் காரணமென்றும் கூறப்படுகிறது.

இப்பொழுது 22 சிங்கள ஆசிரியர்களும் இரண்டு தமிழ் ஆசிரியர்களும் 'டிப்ளோமா' பட்டத்துக்குப் படித்துக் கொண்டிருக்கின்றனர்.

## பருத்தித்துறை கொலை வழக்கு ஆடிமாத விளக்கத்துக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

வடபகுதி அஸைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு. பி ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் நேற்றுக்காலை பருத்தித்துறை கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கிளிநொச்சி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். விக்னேஸ்வரமூர்த்தி வராத காரணத்தால் வழக்கு ஆடி மாத விளக்கத்திற்கு ஒத்திப்போடப்பட்டது.

1962-ம் ஆண்டு மே மாதம் 27-ம் திகதி பருத்தித்துறை பகுதியைச்சேர்ந்த கொறக்கன் கட்டு என்னுமிடத்தில் சின்னையா பரமலிங்கம் என்பவர் அவரது மனைவி தெய்வானையை கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிக்காக திரு. ஈ. பி. சத்துருகுலசிங்க, திரு. டி. கணேசலிங்கத்தின் உதவியுடன் திருவாளர்கள் வி. செல்லத்தம்பி, எஸ். வல்லிபுரம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர் எதிரிக்காக அரசாங்கத்தால் திரு. சிமியோன் நியமிக்கப்பட்டிருந்தார் முடிக்குரிய தரப்பில் திரு. வேக்லி போல் ஆஜரானர்.

# 'ஆனந்தனுக்கு தகுந்த மரியாதை இல்லாதது ஏன்?

## சிறுபான்மையினர் என்பதே காரணம்'

—கல்லூரி அதிபர்

வல்வெட்டித்துறை, புதன்

"இலங்கையில் தமிழர்களாகிய நாம் சிறுபான்மையினராக இருக்கின்றேம். சிறுபான்மைத்தமிழர்களாகிய எமக்கு அரசியல் அதிகாரம் இல்லாத காரணத்தால் நீச்சல் வீரன் ஆனந்தனுக்கு தகுந்த மரியாதை செய்ய முடியாமல் உள்ளது. பண்டைநாளில் இத்தகைய வீரச் செயல் புரிபவர்களுக்கு அரசர்கள் தகுந்த சன்மானம் அளித்துக்கௌரவித்தனர். ஆனல் இன்றே வீரச் செயல்கள் புரியும் தமிழர்களுக்குள்ள நிலையையிட்டு நாம் கவலைப்பட வேண்டும்" என்று வல்வை சிதம்பராக் கல்லூரி அதிபர் திரு. டி. அருட்பிரகாசர் இன்று மாலை மேற்படை கல்லூரி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் நீச்சல் வீரர் ஆனந்தனுக்கு அளித்த வரவேற்பு வைபவத்கு தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ஆனந்தன் எதிர்காலத்தில் பல சாதனைகளை நிலைநாட்ட வேண்டும். சிறுபான்மையினருக்கு ராஜ்ய மில்லாத காரணத்தை நாம் இன்று உணர்ந்திருக்கிறேம். என்றார்.

திரு. எஸ். ஆர். அரியரத்தினம் பேசுகையில் கூறியதாவது: "மாணவர்களுக்கு தாம் எடுத்த காரியத்தைச் செய்து முடிக்கும் துணிவுள்ள சிந்தனை வேண்டும். மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறைகளிலும் சிறப்புப் பெற்றவர்களாக இருக்கின்றனர். உலகத்தில் தகுதியில்லாதவர்கள் என்று எவரையும் கணிக்க முடியாது. ஒவ்வொருவரும் தமது திறமையைச் சரியான வகையில் வெளிப்படுத்த வேண்டும். பெற்றேர்கள் முன்மாதிரி காட்டினுல் பிள்ளைகள் முன்னேற இடமுண்டு."

திரு. எஸ். திசவீரசிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது: 'தமிழர் சமுதாயம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அடங்கி ஒடுங்கி வாழ்கிறது. எமது சமூகம் விமோசனம் பெற வேண்டுமானல் ஆனந்தன் போன்ற ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் எம்மிடையே தோன்றி வீரச் செயல்களைச் செய்ய வேண்டும்' அப்போது தான் நாம் விடுதலை வீரர்களாகக் கணிக்க முடியும்.

திரு. எஸ். கதிர்காமத்தம்பி பேசுகையில் வாழ்க்கையில் வெற்றி பெற, அன்பு, வீரம் ஆகிய இரு துறைகளிலும் வெற்றி பெற வேண்டும் என்று கூறினர்.

நீச்சல் வீரர் ஆனந்தன் தமக்களிக்கப்பட்ட கௌரவத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:

"எனக்குத் தரும் பாராட்டுதல் இளம் உள்ளங்களில்ஆசை ஏற்படுத்தும். எல்லோரிடமும் திறமையுண்டு. திறமையை ஊக்குவிக்கும் போது தான் அத்திறமை உலகத்தாருக்கு வெளிப்படும். எதனையும் முதலில் சாதிக்கமுடியும் போது உலகம் ஏளனம் செய்வது இயல்பு. இதனையிட்டு கவலைப்படக் கூடாது. முயற்சியொன்றில் ஈடுபட்டால் அதே குறிக்கோள் திடமாகவேண்டும். மனிதனுக வாழவேண்டும் இல்லையெனில் மனிதனுக இறக்க வேண்டும்."

பல மாணவர்கள் ஆனந்தனின் வீரச் செயலைப் பாரட்டிப் பேசினர். பரிசுகளும் வழங்கப்பட்டன.

## இன்று

வண்ணைசிவன்கோவில் 9-ம் திருவிழாவில் ஸ்ரீ ஸி. எஸ். எஸ். மணி பாகவதர் "சிவலோகக் காட்சி" என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

## மொபுடுவின் நைஜீரிய விஜயம்

லாகோஸ், மார்ச் 27

நைஜீரியாவில் 8 நாள் சுற்றுப்பிரயாணம் செய்யும் பொருட்டு, காங்கோ ராணுவத் தளபதி ஜெனரல் மொபுடு, 7 பேரடங்கிய தூது கோஷ்டியுடன் செல்லவிருக்கிறர்.

## காமராஜர் யோசனை

சென்னை, மார்ச் 27

இடைக்காலத்தில் காலியான சட்டசபை ஸ்தானங்களுக்கு முன் இருந்த கட்சி அபேட்சகரே தெரிவு செய்யப் படவேண்டும் என தமிழ் நாடு முதலமைச்சர் காமராஜர் கூறினர்.

## தொண்டமான் வரமாட்டார்

யாழ்ப்பாணம், வியாழன்

இம் மாதம் 30-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி மகாநாட்டில் இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் கலந்து கொள்ளமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். தொண்டமான், மலைநாட்டில் ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட வேறொரு பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால், யாழ்ப்பாணத்திற்கு அவர் வரமாட்டார் எனக் கூறப்படுகிறது.

## வரியிறுப்பாளர் சங்கக்கூட்டம்

மாதகல், புதன்

மாதகல் வரி இறுப்பாளர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய திரு. வீ. நவரத்தினராசா கூறியதாவது.

"எமது கிராமம் கடந்த பல வருடங்களாக கிராமச் சபையாரால் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. அதற்கு இங்குள்ள தெருக்களின் கேவல நிலை ஓர் எடுத்துக்காட்டாகும். இந்நிலையில் அரசினர் அளித்த மின்சார விஸ்தரிப்புத் திட்டத்தில் எமது கிராமம் வேண்டுமென்றே புறக்கணிக்கப் பட்டுள்ளது. இந்த நிலை நீடிக்குமானல் வளர்ந்து வரும் விஞ்ஞான உலகத்தோடு நாமும் சேர்ந்து முன்னேற முடியாது பின் தள்ளப்பட்டு விடுவோம்."

ஈற்றில், மின்சார விஸ்தரிப்புத்திட்டத்தில் சமபங்கு அளிக்கும் வரை வரி இறுப்பதில்லை என்ற தீர்மானம் சபையோரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டு கிராசங்கச் சபைத் தலைவருக்கும் ஸ்தல ஸ்தாபன மந்திரிக்கும் அனுப்புவதாக தீர்மானிக்கப்பட்டது.

மேலும் பல கிராமப் பெரியார்களும் வாலிப சங்கப் பிரதிநிதிகளும் பேசினர். முடிவில் சங்கச் செயலாளர் நன்றி தெரிவித்தார்.

# 'ஒதுக்கப்பட்ட நிதி கடனுதவிக்கு போதாது'

## வீடமைப்பு அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, புதன்

வீடமைப்பு இலாகாவினது உதவியுடன் வீடு கட்டுவோருக்கு கடனுதவி அளிப்பது சம்பந்தமாக அரசாங்கத்திடம் இறுதி உத்தரவு தருமாறு உள்நாட்டு, வீடமைப்பு மந்திரி திரு. மகாநாமசமரவீரகேட்டுள்ளார்.

வீடமைப்பு இலாகா கடனுதவியளிப்பதை தடைசெய்தன் காரணமாக, கடனுதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அதிக கஷ்டமுண்டுபண்ணியிருப்பதோடு, தங்கள் உறுதிகள் சட்ட நிபுணர்களால் பரிசீலனை செய்யும் பொருட்டு, அதிக செலவு செய்துள்ளார்கள்.

அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு மகஜரில், கடனுதவிக்கு அதிகமானவர்கள் விண்ணப்பம் செய்துள்ளார்கள் என்றும், ஒவ்வொருதரும் ரூபா 2000 கடனுதவி கேட்டுள்ளார்களென்றும், இக்கடனுதவி தொகுதி வாரியாக அளிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டிருப்பதை மந்திரி சுட்டிக் காட்டினர்.

சில தொகுதிகளிலுள்ள விண்ணப்பதாரர்கள் கடனுதவி பெறும் பொழுது வேறு தொகுதிகளிலுள்ள விண்ணப்பதாரர்கள் கடனுதவி பெருத காரணம், வீடமைப்பு இலாகாவின் செலவிற்காக ரூபா 13 கோடி ரூபாவை திறைசேரி, மேலதிகமாக வரவு செலவு திட்டத்தில் சேர்த்துள்ளதே.

இதனல் சில தொகுதிகளிலுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுந்தான் ரூபா 2000 கடனுதவி பெறுவதில் அனுகூலமடைந்துள்ளார்கள். இந்த நிலைமையிலே வரவு செலவு திட்டத்திற்கு மேலதிகமாக ஒதுக்கியுள்ள 13 கோடி ரூபாவை திரும்பித்தர அனுமதியளிக்கும்படியும், இதனல், ரூபா 2000 கடனுதவி கோரியவர்களுக்காவது வீடமைப்பு இலாகா கடனுதவியளிக்குமென்று மந்திரி சமரவீர மேலும் தெரிவித்தார்.

வீடமைப்பு இலாகா மந்திரியிடம் சமர்ப்பித்த ஒரு மகஜரில் 13 கோடி ரூபா மேலதிக வரவு செல திட்டத்துக்கு ஒதுக்கப்பட்டதால், வீடமைப்புத் திட்டங்கள் அதிகம் பாதிக்கப்படுவதோடு, கடனுதவியளிப்பதை தடைபண்ணுவதாகும் என்று தெரிவித்துள்ளார்கள்.

தற்போதுள்ள 10 கோடி ரூபாவும் கடனுதவியளிப்பதற்கு போதாதென்று இலாகாசுட்டிக்காட்டியுள்ளது.

# அன்னதானசபை கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

சரித்திரப் பெருமைவாய்ந்த நயினதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் யாத்திரீகர் அன்னதானசபைக் கூட்டம் சபைத் தலைவர் திரு. சி. க. தம்பையா தலைமையில் நடைபெற்றது.

அன்னதான சபையில் பெரும் பங்கெடுத்துழைத்த திரு. இ. சிற்றம்பலத்தினது சிவபதப் பேறுகுறித்து 3 நிமிஷ நேரம் மௌனப் பிராத்தனை நடைபெற்றது. அவரது சேவை நலன்களைப் பாராட்டி திரு. வே. சிவப்பிரகாசம் பேசினர். அனுதாபத் தீர்மானமொன்று அன்னரது குடும்பத்தாருக்கனுப்பி வைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

காரியதரிசி தனதிகாரி அறிக்கைகள் வாசிக்கப்பட்டபின் அன்னதானசபை மண்டபம் நிரந்தரமாக அமைக்க காணி வாங்க ஆவன செய்ய உபசபை ஒன்று நியமிக்கப்பட்டது.

## தென்ரோடீஷியா

லண்டன், மார்ச் 27

தென்ரொடீஷியா விஷயமாக பாதுகாப்புசபை தலையிடவேண்டும் என பிரிட்டிஷ் மந்திரி திரு. பட்லர் அறிவித்திருக்கிருர்.

# இராணுவ முகாம் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம், புதன்

பலாலியிலுள்ள பெரிய கட்டுப்புலம் என்ற இடத்தில் இராணுவ முகாம் ஒன்றை அமைக்க நிலம் கொடுக்கும்படி இராணுவத்தினர் அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர்.

சட்டவிரோதக் குடியேற்றத்தையும், கள்ளக்கடத்தலையும் தடுக்கும் பொருட்டு துரித முயற்சிகளை மேற்கொள்ளும் முகமாக இப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்படவிருக்கிறதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஏப்ரல்7-ல் கம்பர் விழா

சென்னை, மார்ச் 27

வருகிற ஏப்ரல் 7-ம் திகதி முதல் தேரழுந்தூரில் கம்பர் விழா நடைபெறும். 3 நாள் நடைபெறும் இவ் விழாவில் 50 தமிழறிஞர்கள் பங்குபற்றுவார்கள். மந்திரி பக்தவத்சலம் விழாவிற்குத் தலைமை வகிப்பார்.

புதுடில்லி, மார்ச் 27

மத்திய அரசாங்க சேவைக்கு பொது சேவைக் கமிஷன் எப்போது ஹிந்தியை பரீட்சைக்கு உபயோகப் படுத்துவது என்பது பற்றி விரைவில் முடிவு செய்யப்படும் என உள்நாட்டு மந்திரி திரு லால்பகதுர் சாஸ்திரி கூறினா.

## வாபஸானது

யாழ்ப்பாணம், வியாழன்

வலிகாமம் கிழக்கு ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. ஈ. சங்கரப்பிள்ளை மீது கொண்டு வரப்படவிருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம், வாபஸ் பெறப்பட்டுள்ளது.

வட மாகாண ஆசிரியர் சங்கம், இந்த விஷயத்தில் தலையீடு செய்ததனுலும் திரு. சங்கரப்பிள்ளை தமது ராஜினுமாக் கடிதத்தை சமர்ப்பித்ததாலும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாபஸானது.


புத்தாண்டின் புனித விருந்து!

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா
(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு போராட்டம்!
பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்டபயங்கரசோதனை!
ஆசையும் நேசமும் பாசமும்
சந்தேகத்திற்கு பலியாகும் பரிதாபம்.

அத்தனையும் புதிய படைப்பு!

சிவாஜி கணேசன் — எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜா தேவி — ஆர். விஜயகுமாரி
எம். ஆர். ராதா
மற்றும் பலர் நடிக்கும்
— பி. எஸ். வி. பிக்சர்ஸ் —

ஆலயமணி

டைரக்ஷன் கே. சங்கர்
இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

4-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா
(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு

மற்றும் 5 திரைகளில்

சிவாஜி கணேசன் ஜெமினி கணேசன்

சாவித்திரி
குமாரி ருக்மணி
வி. நாகையா
முத்துலட்சுமி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணநிதி
டி. கே. ஷண்முகம்
மற்றும் பலர் நடிக்கும்



பத்மினி பிக்சர்ஸ்
கப்பலோட்டிய தமிழன்

மனேகரா
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ராமச்சந்திரன்—பி சரோஜாதேவி
நடித்த
தாய்சொல்லைத் தட்டாதே


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.